பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 17 வெள்ளிக்கிழமை 02.09.2022 கதிர் 299


**இது ரகசியம் அல்ல!**

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு வழங்க முன்வந்துள்ள கடன் 2.9 பில்லியன் டொலர் என்பது சிறிய தொகை அல்ல. இன்றைய ரூபா மதிப்பின்படி 10 லட்சம் கோடி ரூபாவுக்கும் சற்று அதிகம்.

இதனை ஒட்டி 2

## இலங்கையில் நீதியுடன் பொறுப்புக் கூறலை நிலைநாட்ட வைப்பதில் உறுதியாக உள்ளேன்

### பிரதம மந்திரி வேட்பாளரான லிஸ் ட்ரஸ் அம்மையார் திட்டவட்டம்



"நான் பிரதமராக தெரிவு செய்யப்பட்டால் இலங்கையில் மனித உரிமை, நல்லிணக்கம், நீதி மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றை நிலைநாட்டுவதில் உறுதியாக இருக்கிறேன் - பிரித்தானிய பிரதம மந்திரி வேட்பாளர் லிஸ் ட்ரஸ் இவ்வாறு உறுதியளித்திருக்கின்றார்.

பிரித்தானியா தமிழ் கொன்சர்வேட்டிவ் அமைப்பினரால் பிரதம மந்திரி வேட்பாளரான லிஸ் ட்ரஸ் அம்மையாருடன் 2



## விமல் தரப்புக் கூட்டணியின் அங்குரார்ப்பணம் ஞாயிறன்று



நாம் தொடர்ச்சியாக பிரச்சினைகளை பற்றி மட்டுமே பேசிக்கொண்டிருக்க முடியாது. தீர்வு திட்டத்தை முன்வைக்கும் வகையிலேயே புதிய கூட்டணியை உருவாக்கின்றோம். அதன் அங்குரார்ப்பண நிகழ்வு எதிர்வரும் 04 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. அதில் இணையுமாறு அனைத்து சக்திகளுக்கும் அழைப்பு விடுக்கின்றோம்.

-இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ 2

# 2.9 பில்லியன் டொலர் கடன்; வரலாற்றில் முக்கிய மைல்கல்

### சர்வதேச நாணய நிதியப் பிரதிநிதிகளுடான சந்திப்பில் ஜனாதிபதி ரணில் எடுத்துரைப்பு

**கொழும்பு,செப்ரெம்பர் 02**

**பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கைக்கு 2.9 பில்லியன் அமெரிக்க டொலரைக் கடனாக வழங்குவதற்குச் சர்வதேச நாணய நிதியத்தின் பணிக்குழாம் மட்டத்தில் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.**

**இது இலங்கை வரலாற்றில் ஒரு முக்கிய 'மைல்கல்' என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.** 2



## 8 செயலணிகளை நியமித்தார் ரணில்



சிறந்த முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்கி, முதலீட்டாளர்களைப் பாதுகாக்கும் வகையில், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரையின் பேரில் அரச மற்றும் தனியார் துறை தலைவர்களை உள்ளடக்கிய எட்டு செயலணிகள் 2

## மேலும் பெரிய தொகையை இலங்கைக்கு நாணய நிதியம் வேறு வழிகளில் வழங்கும்!

### தூதுக்குழுவின் பிரதித் தலைவர் மசாஹிரோ நொசாக்கி தெரிவிப்பு

சர்வதேச நாணய நிதியம் மூலம் இலங்கைக்கு வழங்கவுள்ள 2.9 பில்லியன் டொலருக்கு மேலதிகமாக மேலும் பாரிய தொகையை வழங்க எதிர்பார்ப்பதாக சர்வதேச நாணய நிதிய தூதுக்குழுவின் பிரதி தலைவர் மசாஹிரோ நொசாக்கி தெரிவித்தார்.

நாணய நிதியத்தின் இருதரப்பு மற்றும் பல்தரப்பு பங்காளிகள் ஊடாக அவை வழங்கப்படும் எனவும் அவர் கூறினார்.

பொது நிதி முகாமைத்துவத்தில் கூடிய கவனம் செலுத்தியாக வேண்டும். குறிப்பாக ஊழல் அற்ற வேலைத் திட்டங்களுக்கு 2



## போர் முடிந்த பின்னரும் இராணுவக் குவிப்பு ஏன்?

### நேற்று நாடாளுமன்றில் விக்கி கேள்வி



போருக்கு பின்னர் ஒரு நாட்டில் மேற்கொள்ளப்படவேண்டிய நல்லிணக்க விடயங்கள் இலங்கையில் மேற்கொள்ளப்படவில்லை. அதற்குப் பதிலாக இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது என தமிழ் மக்கள் தேசியக்கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் 2

### அன்பளிப்பு வாகன இறக்குமதிக்கான வரிக்கு

## ஜப்பான் வழங்கிய ஒரு கோடி 43 லட்சம் ரூபாவை உடன் மீளளிக்க யாழ் மாநகர சபைக்குப் பணிப்பு!

### ஆளுநர் நேற்று விடுத்தார்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், செப்.02

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு ஜப்பான் அன்பளிப்பாக வழங்க முன்வந்த நான்கு கொம்பக்ட் ரக வாகன இறக்குமதியின் போது செலுத்தப்பட வேண்டிய வரிப்பணத்திற்காக ஜப்பானினால் வழங்கப்பட்ட ஒரு கோடியே 43 லட்சத்து 26 ஆயிரத்து 466 ரூபா பணத்தை உடன் ஜப்பான் தூதரகத்துக்கு மீளளிக்குமாறு வட மாகாண ஆளுநர் யாழ் மாநகர சபைக்குப் பணிப்புரை 2

## சர்வ கட்சி அரசு 'அவுட்'! இனி மொட்டு அரசுதான்

### நாமல் ராஜபக்ஷ கூறுகின்றார்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வ கட்சி அரசாங்கத்தை அமைக்க, அனைத்து கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்த போதும், சர்வகட்சி அரசாங்கம் அமைய வாய்ப்பில்லை என பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் 2

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மூன்று விடயங்கள் கவனிக்கப்பட வேண்டும்.

முதலாவது - இந்தத் தொகை ஒரேடியாக இலங்கைக்குக் கிடைக்கப் போவது அல்ல. 48 மாதங்களுக்கு - அதாவது நான்கு வருடங்களுக்கு - பிரித்துப் பிரித்து, பியத்துப் பியத்து வழங்கப் போகிறார்கள். எப்படிப் பார்த்தாலும் சராசரியாக ஒரு மாதத்திற்கு 22,000 கோடி ரூபாவுக்கு குறையாமல் கிடைக்கும்.

அடுத்தது - இது கடன் வழங்கும் அறிவித்தல்தான். அதற்கான நிபந்தனை விடயங்கள் அதிகம் உள்ளன. கடன் தொகையை பெறுவதற்கு அவை நிறைவேற்றப்பட வேண்டும். இலங்கைக்கு ஏற்கனவே கடன் வழங்கியோரிடம் கடன் மீள் செலுத்துகை தொடர்பான மறுசீரமைப்பு உத்தரவாதம் பெற்றுக்கொள்ளல் என்பதில் தொடங்கி, இது நீண்ட பட்டியல். நேற்று அவற்றை நாடாளுமன்றத்தில் விலாவாரியாக விவரித்தார் கூட்டமைப்பு பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன். அந்த நிபந்தனை விடயங்கள் இன்னும் நிறைவு செய்யப்படாமல் நிலுவையில் உள்ளன என்பதை நாம் மறக்கக் கூடாது.

மூன்றாவது - இப்போது அறிவிக்கப்பட்டது கடன் தொகையில் ஒரு பகுதிதான். மேலும் கடன் தொகைகளை சர்வதேச நாணய நிதியமே பல்வேறு வாய்ப்புகள், தரப்புகள் மூலம் பெற்று தர ஏற்பாடு செய்யும்.

ஆக, இந்த விடயத்தில் சாதகமான, அதேசமயம் பாதகமான, பல அம்சங்கள் உள்ளன. இத்தொகை கிட்டியமையை ஒட்டி நாம் ஒரேடியாக மகிழவும் முடியாது, அதே நேரம் கவலைப்படாமலும் இருக்க முடியாது.

***

நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றிய கூட்டமைப்பு பேச்சாளர் சுமந்திரன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஒரு விநோதமான நடவடிக்கை குறித்து குறிப்பிட்டு இருக்கின்றார்.

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கையொப்பம் எல்லாருக்கும் தெரியும். நானும் அதைப் பல தடவைகள் பார்த்துள்ளேன். எனக்கு அது பரிச்சயமான கையெழுத்துதான். அவர் வழமையாக ஆங்கிலத்தில்தான் ஒப்பமிடுவார்" - என்று தெரிவித்தார் சுமந்திரன்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஒப்பமிடுகின்ற போது ஒரு தடவை அருகில் நின்று நானும் நோட்டமிட்டிருக்கின்றேன்.

இது 2002 முற்பகுதியில் வவுனியா செயலகத்தில் நடந்தது.

2001 டிசம்பர் 5ஆம் திகதி தேர்தலில் வென்று பிரதமராக வந்த ரணில் விக்கிரமசிங்க, 2002 பெப்ரவரியில் விடுதலைப் புலிகளுடன் ஒரு யுத்த நிறுத்த உடன்பாட்டைச் செய்தார்.

அப்போது இந்த இணைய வசதி, நிகர் நிலை இணைப்பு எல்லாம் இல்லை.

ரணில் விக்கிரமசிங்க வவுனியா செயலகத்தில் வைத்து யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் ஒப்பமிட, அதே நேரம் கிளிநொச்சியில் புலிகளின் தலைவர் அந்த ஆவணத்தின் பிரதியில் ஒப்பிட்டார்.

நோர்வேத் தரப்பு தொலைபேசி வாயிலாக இருதரப்பும் ஒரே சமயத்தில் ஒப்பமிடுவதை உறுதி செய்தது.

வவுனியாவில் ரணில் விக்கிரமசிங்க ஒப்பமிட்ட ஆவணத்தை அருகில் இருந்த நோர்வேத் தூதுவர் பெற்றுக் கொண்டார். பிரதமர் ரணிலுடன் அப்போது வவுனியாவில் இராணுவத்தின் கடைசிக் கட்டுப்பாட்டு எல்லையான தாண்டிக்குளம் வரை நாங்கள் போனோம். பிரதமர் ரணில் தாண்டிக்குளத்துடன் திரும்பி விட்டார்.

அன்று தான் 'ஏ9' வீதி ஊடான பாதை மீளத் திறந்தார்கள். நாங்கள் திறக்கப்பட்ட பாதை வழியாக புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியில் சுமார் 100 கிலோ மீற்றர் பயணித்து முகமாலை வாசல் ஊடாக மீண்டும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த குடா நாட்டு பகுதிக்குள் பிரவேசித்தோம்.

பாதை திறக்கப்பட்ட நாளில் நானும் முதல் பயணிகளில் ஒருவன். ஒரு பிக்கப் வாகனத்தை நானே செலுத்திச் சென்ற நினைவு உண்டு.

சரி, இனி விடயத்துக்கு வருகிறேன். விடயம் ரணிலின் ஒப்பம் பற்றியது. அன்று வவுனியாவில் அந்த யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் ரணில் ஆங்கிலத்தில் ஒப்பமிட்டார் என்றுதான் எனக்கும் நினைவு.

இப்போது கைது செய்யப்பட்டுள்ள அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஏற்பாட்டாளர்களை பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைப்பதற்கான உத்தரவில் பாதுகாப்பு அமைச்சர் என்ற முறையில் ரணில் விக்கிரமசிங்கவே ஒப்பமிட்டுள்ளார். ஆனால் அந்தத் தட்டுப்புக் காவல் பத்திரங்களில் அவரின் ஒப்பம் சிங்களத்தில் உள்ளது.

ஒருவர் ஒரே வடிவத்திலான ஒப்பத்தைத் தான் உத்தியோபூர்வமாகப் பயன்படுத்த முடியும். பயன்படுத்த வேண்டும்.

ஆனால் இந்தத் தடுப்புக்காவல் உத்தரவுப் பத்திரங்களில் மட்டும் அவர் சிங்களத்தில் ஒப்பமிட்டுள்ளார் என்று சுமந்திரன் நாடாளுமன்றத்தில் சுட்டிக் காட்டினார்.

ஏன் இப்படி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடந்து கொண்டார்? தெரியவில்லை. தேடிப் பார்க்க வேண்டும். ஏதோ ஒரு காரணம் இல்லாமல் இப்படிச் சிங்களத்தில் - வழமைக்கு மாறாக - ரணில் விக்கிரமசிங்க கையொப்பமிட்டிருக்கமாட்டார்.

- மின்னல் -

## விமல் தரப்புக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

"ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியில் இருந்து வெளியேறியுள்ள டலஸ் அணியுடனும் பேச்சு நடத்தப்படும். அத்துடன், தேசியவாத சக்திகள் மற்றும் மாற்றத்தை விரும்பும் இளைஞர்கள் உட்பட கொள்கையை ஏற்கக்கூடிய அனைவரையும் எம்முடன் இணையுமாறு அழைக்கின்றோம்." எனவும் விமல் குறிப்பிட்டார்.

## இலங்கையில் நீதியுடன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இணையவழி கூட்டத்திலேயே அவர் இதனை அறிவித்தார். ரெலோவின் ஊடகப்பேச்சாளர் சுரேந்திரனும் இந்தச் சந்திப்பில் பங்கேற்றார்.

இலங்கை தமிழர்கள் நீண்ட காலமாக ஐ.நாவில் தங்களுக்கான நீதியைக் கோரிப் போராடிக்கொண்டிருக்கின்றார்கள். அதற்கு தங்களுடைய ஆதரவு நிலை எப்படி இருக்கும் என்று கேள்வி எழுப்பப்பட்டது.

"நான் பிரதமராக தெரிவுசெய்யப்பட்டால் இலங்கையில் மனித உரிமை, நல்லிணக்கம், நீதி மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றை நிலைநாட்டுவதில் உறுதியாக இருக்கிறேன்" என்று டிரஸ் கூறினார்.

மேலும் வெளிவிவகார அலுவலர்களுக்கான செயலாளரைத் தெரிவு செய்கின்ற பொழுது இந்த விடயத்தில் நான் அதிக கவனம் செலுத்துவேன் என்றும் அவர் உறுதியளித்தார்.

அண்மையில் அனைத்து தமிழ்த் தரப்பினரும் ஒன்றிணைந்து சர்வதேச நீதிமன்றத்திற்கு இலங்கையைப் பாரப்படுத்த ஐ.நா. பாதுகாப்புச் சபையைத் தூண்டும் பிரேரணையை நிறைவேற்றக் கோரி ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் பிரதான அங்கத்துவ நாடுகளுக்கு வரைவு ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கான பிரேரணையை நிறைவேற்றுவதில் பிரதான நாடாக பிரித்தானியா தலைமை வகிக்கிறது. பிரித்தானியாவின் எதிர்கால பிரதமராக லிஸ் ட்ரஸ் தெரிவு செய்யப் படுவதற்கு அதிக வாய்ப்புகள் காணப்படுகின்றன.

இந்த நிலையில் குறித்த சந்திப்பும் லிஸ் ட்ரஸ் அம்மையாரின் உறுதிமொழியும் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

## 2.9 பில்லியன் டொலர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போதே ஜனாதிபதி ரணில் மேற்கண்டவாறு கூறினார். இதன்போது மேலும் கருத்துரைத்த அவர் -

கடன் நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பது மற்றும் அனைத்து சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தையும் உறுதி செய்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுப்பது மிகவும் முக்கியமானது.

வீழ்ச்சியில் இருந்து மீள்வது, கடனைத் திருப்பிச் செலுத்த அவகாசம் பெறுவது மட்டுமன்றி, சமூக துறைகளைப் பாதுகாப்பது, வாழ்க்கை முறையின் பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவது என்பன முக்கியமாகும். அதனைவிட தற்போதைய நிலைமையில் பின்னடைவு ஏற்படாமல் இருப்பதை உறுதிசெய்வதும் முக்கியமானதாகும்.

சமூகக் கட்டமைப்பைப் பராமரித்தல் மற்றும் மேம்படுத்துதல், பாதிக்கப்படக் கூடிய குழுக்களைப் பாதுகாத்தல் என்பவற்றை முன்னெடுக்கும் அதேநேரம் போட்டித் தன்மை மிகுந்த ஏற்றுமதியை அடிப்படையாகக்கொண்ட தொழில் துறையாக நாட்டை மேம்படுத்துவதை புதிய பொருளாதார யுகமாகக் கருதுகின்றோம்.

இதன் ஆரம்பம் கடினமானதாக இருக்கும். ஆனால், நாம் அதனையே பின்தொடர்ந்தால் எம்மால் இன்னும் முன்னேற முடியும். இப்போதைக்கு எது தேவையோ அதுவே எமது அர்ப்பணிப்பாக இருத்தல் வேண்டும்.

எனினும், இங்கு நாம் எமது இலக்கை அடைவதை மட்டும் குறிக்கோளாகக் கொண்டிராமல் அதற்கு அப்பாலும் செல்ல வேண்டும்.

ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்துக்கு நம்மை நாம் மாற்றிக்கொள்வோம். இது நமது சமூக சேவைகளை நிலைநிறுத்துவதை எளிதாக்கும்.

இலங்கை தனது கடன்களைக் குறைப்பதற்கும், முடிந்தால் கடன்களை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும் இது ஒரு தொடக்கமாக இருக்க வேண்டும் - என்றார்.

## 8 செயலணிகளை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உருவாக்கப்பட்டுள்ளன.

செயலணிகளை நிறுவும் நிகழ்வு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தலைமையில் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

புதிய செயற்திட்டங்களை ஆரம்பித்தல், நிர்மாணத் துறைக்கு அனுமதி பெறுதல், வணிகச் சொத்தைப் பதிவு செய்தல், கடன் பெறுதல், சிறு முதலீட்டாளர்களைப் பாதுகாத்தல், நாடுகடந்த வர்த்தகம், வரி செலுத்துதல், உள்ளிட்ட 8 துறைகளின் அடிப்படையில் இந்த செயலணிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

வணிக நடவடிக்கைகள் தொடர்பான சேவைகளை வழங்கும் அரச நிறுவனங்களால் செயல்படுத்தப்படும் விதிமுறைகளையும், நடவடிக்கைகளையும் உள்ளடக்கும் வகையில் இந்த செயலணிகள் செயற்படும்.

இந்நிகழ்வில் மேற்படி செயலணிகளின் தலைவர்கள் மற்றும் இப்பணியுடன் தொடர்புடைய அனைத்து அரச நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 74 உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் சியோ காண்டா, நிதி பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் செயலாளர் கே.எம்.எம். சிறிவர்தன, இலங்கை முதலீட்டுச் சபையின் பணிப்பாளர் நாயகம் ரேணுகா எம்.வீரகோன், ஜனாதிபதியின் சட்ட விவகாரங்களுக்கான சிரேஷ்ட ஆலோசகர் பிம்பா திலகரத்ன, ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் கலாநிதி சமரதுங்க, பொருளாதார மறுசீரமைப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் கலாநிதி சரத் ராஜபத்திரன, இலங்கை வணிக சபையின் உப தலைவர் துமிந்த ஹூலங்கமு ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## மேலும் பெரிய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முன்னுரிமை வழங்குதல் அரசாங்கத்தின் கட்டாயப்பணியாக அமைய வேண்டும். அதற்கமைய உறுதியான ஊழல் தடுப்பு வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டும். நிதி வெளிப்படைத் தன்மை மற்றும் பொது நிதி நிர்வாகத்தை மேம்படுத்துவதன் மூலம் ஊழல் பாதிப்புகளை குறைத்தல், வலுவான ஊழலுக்கு எதிரான சட்ட கட்டமைப்பை அறிமுகப்படுத்துதல் மற்றும் சர்வதேச நாணய நிதி தொழில்நுட்ப உதவியால் ஆதரிக்கப்படும் ஆழமான ஆளுகையை கண்டறிதல் அவசியம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் வரிக்கொள்கையில் மாற்றத்தை உருவாக்க வேண்டும், இப்போதும் குறைவான மட்டத்திலேயே வரி அறவீடுகள் காணப்படுகின்றன. உயர் வருமானத்தை பெறுவோருக்கான வரி விதிப்புகளை அதிகரிக்க வேண்டும். முறையான கட்டமைப்பை உருவாக்கிக்கொள்ள வேண்டியது அவசியம் என்றார்.

## போர் முடிந்த பின்னரும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று இடைக்கால வரவு - செலவுத் திட்டத்தின் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்:

இலங்கையில் 3 லட்சத்து 31ஆயிரம் படை வீரர்கள் சேவையில் உள்ளனர்.. எனினும் பிரித்தானியாவில் 90 ஆயிரம் படையினரே உள்ளனர் .

போருக்கு பின்னர் ஒரு நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய டிடிஆர் (DDR) என்ற நிராயுதபாணியாக்கல் (Disarmament), படைகளில் இருந்து விடுவிடுத்தல் (Demobilization) மற்றும் மறு ஒருங்கிணைப்பு (Reintegration) என்ற மூன்று விடயங்கள் இலங்கையில் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை.

இதன் காரணமாகவே இலங்கையில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் முன்மொழியப்பட்டுள்ள வரவு - செலவுத்திட்டத்தில், மக்களின் நிவாரணங்களை காட்டிலும் பாதுகாப்புக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்வளவு படையினர் தொடர்ந்தும் செயலில் இருப்பது இந்தியாவுக்கு, சீனாவுக்கு, அமெரிக்காவுக்கு அல்லது மாலைத்தீவுக்கு எதிராகவோ போர் செய்வதற்காக அல்ல மாறாக தொடர்ந்தும் வடக்கு கிழக்கின் தமிழ் பிரதேசங்களை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கவே படையினர் தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றனர் என தெரிவித்துள்ளார்.

## ஜப்பான் வழங்கிய ஒரு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வழங்கியுள்ளார்.

ஜப்பான் தூதரகம் நன்கொடையாக வழங்க முன்வந்த இந்த நான்கு வாகனங்களையும் இறக்குமதி செய்வதற்கான அனுமதியை கடந்த 4 வருடங்களாக இலங்கை அரசின் உரிய திணைக்களங்களிலிருந்து பெற முடியாதமையினால் திட்டத்தில் இருந்து வெளியேறி பணத்தை மீளளிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளர் த.ஜெயசீலன் ஜப்பான் தூதரகத்திற்கு கடிதம் எழுதியதன் அடிப்படையில் ஜப்பான் தூதரகமும் பணத்தை மீளக் கோரியுள்ளது.

இது தொடர்பாகப் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்த பின்னர் இவ்விடயம் குறித்து நேற்று இடம்பெற்ற கூட்டத்தில் வடக்கு ஆளுநர் ஆராய்ந்துள்ளார்.

தூதரக நிதியை மீளச் செலுத்துமாறு ஆளுநர் தெரிவித்தார் என வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செ.பிரணவநாதன் நேற்றே கடிதம் மூலம் மாநகர ஆணையாளருக்கு எழுத்தில் அறிவித்துள்ளார்.

## சர்வ கட்சி அரசு 'அவுட்'! ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு முன்மொழிந்த கட்சிகள் கூட இன்று அதற்கு இணங்கவில்லை.

இந்த நிலையில் நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மையை இனியும் ஒத்திவைக்க முடியாது, எனவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆதரவளித்த 134 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இணைத்து ஸ்திரமான அரசாங்கத்தை அமைக்க வேண்டும்.

இதன் மூலம் மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடிகள் தீர்க்கப்பட வேண்டும் என நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி பதவிக்கு நியமித்ததற்கு டீலோ அல்லது வழக்குகளில் இருந்து தப்பிக்க வைக்கப் பண்ணுவதோ காரணம் அல்ல.

நாட்டைச் சரியான பாதையில் கொண்டு செல்லக்கூடிய ஒரே நபர் அவர்தான். ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முன்வந்த டலஸ் அழகப்பெருமவை விட ரணில் விக்கிரமசிங்கவுக்கு அரசியல் அனுபவம் அதிகம். சர்வதேச சமூகத்தை கையாள்வதில் அவருக்கு இருந்த முதிர்ச்சி மிகவும் முக்கியமானது.- என்றும் நாமல் ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir



# இனப்படுகொலை யுத்தக்குற்றத்துக்கான ஆதாரங்களை கூட்டமைப்பு வழங்கியது!

## விநோ நோகராதலிங்கம் கூறுகிறார்

கடந்த காலங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இனப்படுகொலையாக இருந்தாலும் யுத்த குற்றங்களாக இருந்தாலும் அனைத்துக்குமான போதிய ஆதாரங்கள் ஆரம்ப காலங்களிலே ஜெனீவாவிற்கு வழங்கியுள்ளது எனவும் தற்போது நடைபெற இருக்கின்ற கூட்டத்துக்கான ஆதாரங்கள் விசேடமாக வழங்கப்பட வேண்டும் என்ற அவசியம் இல்லை என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் விநோ நோகராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

ஜெனீவாவில் போர்க்குற்றம் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்களுக்கான போதியளவு சான்றிதழ்கள் வழங்க வில்லை என தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் தெரிவித்துள் ளார்கள் இது தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன என்று ஊடகவியலாளரின் கேள்விக்குப் பதிலளிக்கையிலே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டவர்கள் நாளில் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் நடைபெற்ற மாபெரும் போராட்டத்தில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு மேலும் தெரிவித்தவை வருமாறு –

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டம்தொடர்ந்துகொண்டிருக்கின்றது. இலங்கை அரசாங்கத்தின் ஒ.எம்.பி அலுவலகம் தேவை என்பது அவர்களின் கோரிக்கை.

உள்ளக பொறிமுறையுடன் தீர்வை எட்டுவதற்கான அலுவலகத்தை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றார்கள்.

சர்வதேச ரீதியான பொறிமுறையுடன் தான் காணாமல் ஆக்கப்பட்ட வர்களுக்கான நியாயமான தீர்வு கிடைக்கும் என்று அவர்கள் நம்புகின்றார்கள். உள்நாட்டு பொறிமுறையில் அவர்கள் நம்பிக்கை இழந்துள்ளார்கள்.

இதனை உடனடியாக நிறுத்திவிட்டு சர்வதேசத்திலான பொறிமுறையின் கீழ் அவர்களின் உறவுகளுக்கு என்ன நடந்தது என்று ஆராயப்பட வேண்டும் என்ற அவர்களின் கோரிக்கைகளை நாங்களும் ஏற்றுக்கொள்கின்றோம்.

அப்பொழுது இறுதி யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த பொழுது முன்னாள் ஜனாதிபதி அப்போதைய பாதுகாப்பு செயலாளராக இருந்தவர் தான் காணாமல் போனவர்களுக்கான முழு காரணமாக இருக்கின்றார்.

இன்று அவர் வெளிநாடுகளில் தஞ்சம் அடைய முடியாத நிலையில் நாடோடியாக சென்று நாடுவிட்டு நாடு சென்று குறுகிய கால தங்கலில் இருக்கின்றார். எந்த ஒரு நாடும் அவரை ஏற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.

எங்கள் மக்களின் சாபம் அவரை விட்டுவைக்கவில்லை அவரை மட்டுமல்ல ராஜபக்ஷ குடும்பம் அந்த கட்சியினர் அனைவரையும் விட்டுவைக்கவில்லை.

தமிழ்மக்களின் சாபம் ஏதோ ஒரு வகையில் அவர்களை துரத்திக் கொண்டிருக்கின்றது. அவர்கள் இந்த நாட்டிலும் நிம்மதியாக வாழ முடியாது. வெளிநாட்டிலும் நிம்மதியாக வாழ முடியாத நிலை இருக்கின்றது.

வினை விதைத்தவன் வினை அறுத்தே தீர வேண்டும் என்ற நிலைப்பாட்டுடன் அவர்கள் இருக்கின்ற நிலை காணப்படுகின்றது.

இன்று உறவுகளைத் தேடி அலைந்த தாய்மார்கள் இறந்து கொண்டு செல்கின்றார்கள். இது அவர்களின் இயற்கை இறப்பல்ல. கொலை வீதியில் போராடிக்கொண்டிருக்கின்றார்கள் என்றால் அவர்கள் திட்டமிட்ட வகையில் கொலை செய்யப்படுகின்றார்கள். இந்த அரசாங்கம் அதைத்தான் செய்துகொண்டிருக்கின்றது.

இதற்கெல்லாம் சர்வதேச தலையீடு ஊடாகத்தான் நிரந்தரத் தீர்வினை எட்ட முடியும் எனத் தெரிவித்துள்ளார்.

# காலி முகத்திடல் போராட்டக் காரர்களைத் தாக்கிய குண்டர்களுக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டும்

## ஓமல்பே சோபித தேரர் விடாப்பிடி


மக்கள் போராட்டத்தை பயங்கரவாதம் என்றுகூறிபோராட்டத்தில்ஈடுபட்டவர்களைக் கைது செய்வதை விடுத்து மே 9 ஆம் திகதி காலி முகத்திடல் போராட்டக்காரர்களைத் தாக்கிய குண்டர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று கலாநிதி ஓமல்பே சோபித்த தேரர் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த மே 9 ஆம் திகதி காலி முகத்திடலில் அமைதியான முறையில் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை தொடர்பில் உடனடியாக சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு கோரி மக்கள் பேரவையால் இலங்கை மனித ஆணைக் குழுவில் கடிதம் ஒன்று கையளிக்கப்பட்டது. இதன் போது வருகை தந்திருந்த ஓமல்பே சோபித்த தேரர் இவ்வாறு கருத்துத் தெரிவித்திருந்தார்.

நாட்டில் உள்ள அனைத்து மக்களும் போராட்டங்களைச் செய்தனர். வாழ்வதற்கான உரிமையை வழங்குமாறு கோரி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மக்கள் போராட்டத்தைப் பயங்கரவாதம் என்று கூறி போராட்டத்தில் பங்குபற்றிய அப்பாவி மக்களைக் கைது செய்து வருகிறார்கள். போராட்டகாரர்களை பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பயன்படுத்தி கைது செய்யும் நடவடிக்கைகளே முன்னெடுக்கப்படுகின்றன. இது பாரதூரமான குற்றமாகும்.

போராட்டத்தில் பங்கேற்றவர்கள் எவரும் பயங்கரவாதிகள் அல்லர். மே 9 ஆம் திகதி காலி முகத்திடல் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல் நடத்திய குண்டர்கள் மீது ஏன் இன்னும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இதன்போது போராட்டக்காரர்களைத்தாக்கியகுண்டர்கள் கைது செய்யப்பட வேண்டும்.



மேலும் போராட்டத்தை ஒடுக்குவதன் ஊடாக மனித உரிமைகள் மீறப்படுகின்றமை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். அது தொடர்பில் சர்வதேச விசாரணைகள் அவசியமாகும். – என்றார்.



நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# கொழும்பு பின்வாங்கியது ஏன்?

**கைது செய்யப்பட்டுள்ள அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் போராட்டக் குழுவின் பிரதிநிதிகளுக்கு எதிராக பயங்கரவாதத் தடை சட்டம் பிரயோகிக்கப்பட மாட்டாது என்று பிரதமர் தினேஷ் குணவர்தன நாடாளுமன்றத்தில் உறுதியளித்திருக்கின்றார்.**

**பயங்கரவாதத் தடைச் சட்டப் பூச்சாண்டியை ரணிலின் அரசு தனது முகக்கவசமாக எடுத்த போது இந்த முகத்திரை நேரத்துடனேயே கிழிக்கப்படும், அரசு இந்த விடயத்தில் வெற்றிகரமாக பின்வாங்கும் என்பவை எல்லாம் எதிர்பார்க்கப்பட்டவைதான்.**

**ஏற்கனவே பயங்கரவாதத் தடைச் சட்டப் பிரயோகத்தினால் சர்வதேச சமூகம் இலங்கை மீது நெருப்பாகக் காய்ந்து கொண்டிருக்கின்றது.**

**அந்தச் சட்டத்தை மாற்றி அமைப்போம், அப்படி மாற்றி அமைக்கும் வரை அதனைப் பயன்படுத்த மாட்டோம் என்று ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் உட்பட பல சர்வதேச தளங்களில் இலங்கை அரசு உறுதியளித்திருந்தது.**

**அதன் தொடர்ச்சியாகப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக சில அருவல் நெருவலான திருத்தங்களை – மாற்றங்களை – மேற்கொள்ளவும் இலங்கை அரசு செப்படி வித்தை நடவடிக்கைகளை எடுத்தது. எனினும் அந்த மாற்றங்களும் திருத்தங்களும் சர்வதேச சமூகத்தைத் திருப்திப்படுத்தவில்லை. வாக்குறுதி அளித்தபடி பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக நீக்குங்கள் என்ற அழுத்தம் சர்வதேச சமூகத்திலிருந்து தொடர்ந்து இலங்கைக்கு வந்து கொண்டிருந்தது.**

**இந்தச் சமயத்தில்தான் ‘அறகலய’ போராட்டக்காரர்களுக்கு எதிராக அந்தச் சட்டத்தை கையில் எடுத்து எதேச்சாதிகாரம் காட்ட முயன்றது ரணிலின் அரசு.**

**அதுவும் நாடு பொருளாதாரப் பேரழிவு வீழ்ச்சியில் முடங்கி கிடக்க, அதிலிருந்து மீளுவதற்கு சர்வதேசத்தின் உதவி, ஒத்தாசையை எதிர்பார்த்து நப்பாசையுடன் இலங்கை தவித்துக் கொண்டிருக்கும் இச்சமயத்தில், சர்வதேச சமூகத்தை மீறி, எகிறிக் குதிக்கும் விதத்தில், தனது அரசியல் நோக்கங்களை எட்டுவதற்காக, ரணிலின் அரசு மீண்டும் பயங்கரவாதத் தடைச் சட்டம் என்ற காட்டுமிராண்டித்தனமான ஒழுங்கைக் கையில் எடுத்தது.**

**இன்னும் பத்து நாள்களில் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் அமர்வில் இந்த விடயத்தை ஒட்டி சர்வதேச சமூகத்தின் கடும் எதிர்ப்பை – பலமான குட்டை – கொழும்பு எதிர்கொள்ள நேரிடும் என்ற நிலையில், முந்தி கொண்டே அதிலிருந்து நைஸாகக் கழன்று கொள்வதற்காக, அந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டம் அந்த மாணவர்களுக்கு எதிராகப் பிரயோகிக்கப்பட மாட்டாது என்ற உறுதிமொழியை அவிழ்த்து விடுகின்றார் பிரதமர்.**

**எது, எப்படி என்றாலும் அந்தச் சட்டத்தின் கீழ் அந்த மாணவர்களுக்கு எதிராகத் தடுப்புக் காவல் உத்தரவு வழங்கப்பட்டமை, இந்த விடயத்தில் கொழும்பு இன்னும் திருந்தவில்லை, மனித உரிமைகளைப் பேணும் விவகாரத்தில் சர்வதேச நியமங்களை கடைப்பிடிக்க அது தயாரில்லை என்பதையே வெளிப்படுத்தி நிற்கின்றது.**

# பொருளாதார நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கான திட்டமெதுவும் வரவு – செலவு திட்டத்தில் இல்லை!

## விமல் வீரவன்ஸ சுட்டிக்காட்டு



அமெரிக்க தூதுவர் உள்ளிட்ட இருவர் கௌப்பியை கொட்டுவது போன்றும், அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இரு கைகளையும் ஏந்தி அவற்றை பெற்றுக்கொள்வது போன்றும் வெளியான காட்சிகள் இலங்கைக்கு பிச்சை கொடுப்பதை போன்றே இருந்தது.

இந்த சம்பவம் எனக்கு அழுகையை ஏற்படுத்தியது. அத்துடன் பொருளாதார பிரச்சினைக்கு தீர்வுகாண எந்த வேலைத்திட்டமும் வரவு – செலவுத் திட்டத்தில் இல்லை என எதிர்க்கட்சியின் சுயாதீன அணியை சேர்ந்த முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற இடைக்கால வரவு செலவுத் திட்டம் மீதான முதலாவது நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியின் ஆழத்தை அறிந்து, அதற்கு ஏற்றால் போன்று இந்த இடைக்கால வரவு –செலவுத் திட்டம் அமையும் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால் நாங்கள் மிகவும் பாரதூரமான பொருளாதார நெருக்கடியிலேயே இருக்கின்றோம்.

இந்த நிலை அதிகரித்து செல்கின்றதே தவிர குறைவதாகத் தெரியவில்லை. இப்போது செய்யப்பட்டுள்ள சில இறக்குமதி தடைகளால் தொழிற்சாலைகளில் உற்பத்தி பொருள்களுக்கான மூலப்பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்த நேரத்தில் நெருக்கடியில் இருந்து மீண்டெழுவதற்காகவே முயற்சிக்க வேண்டுமே தவிர, நெருக்கடிகளை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடாது.

ஆனால் மக்கள் இந்த நெருக்கடியில் இருந்து எப்படி எழுவது என்பது தொடர்பான நோக்கு இந்த வரவு செலவுத் திட்டத்தில் இல்லை. கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் முன்நோக்கு இல்லாது செயற்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டு இருந்தது. பீ.பீ.ஜயசுந்தர என்ற பொருளாதார கொலையாளியை ஜனாதிபதியின் செயலாளராக பணிக்கு அமர்த்தி நெருக்கடியை மேலும் கொண்டு சென்றுள்ளார்.

எங்கே அவர்? இந்த நெருக்கடி முன்கூட்டியே அறிந்திருக்கக் கூடியது. இப்போது நாங்கள் நெருக்கடியின் ஆரம்பத்திலேயே இருக்கின்றோம். தொழிற்சாலைகள் மூடப்பட்டுக் கொண்டு போகின்றன. இன்னும் நெருக்கடிக்குள் போகப் போகின்றோம். எங்கே அவற்றுக்குத் தீர்வு.

இந்நிலையில் இங்குள்ள அரச நிறுவனங்களை தனியாருக்கு வழங்கினால் டொலரைத் தேட முடியுமா? ஐஓசி, டயலொக் உள்ளிட்ட நிறுவனங்கள் இங்கே ரூபாவில் பணத்தை பெற்று டொலரில் அவற்றை மாற்றி தங்களின் நாட்டுக்கு கொண்டு செல்கின்றன. அப்போது டொலர் வெளிநாட்டுக்கு போகாதா?

இதேவேளை நான் தனியாக அழுத சம்பவங்கள் சில உள்ளன. அதில் இந்தியாவின் யாசகர் ஒருவர் இலங்கைக்கு நன்கொடை வழங்கினார். அடுத்ததாக அமெரிக்காவின் தூதுவரும் இன்னுமொருவரும் கௌப்பி கொண்டு வந்தார்கள். அதனை கொண்டு வந்திருந்தால் பக்கெற்றை கொடுக்கலாம் தானே. ஆனால் சுசில் பிரேம ஜயந்த பிச்சை எடுப்பவர் போன்று இரு கைகளையும் ஏந்திக்கொண்டு இருக்க, அவர்கள் இருவரும் அவற்றைக் கொட்டுகின்றனர்.

இதனை பார்த்து ‘ஐயோ!’ என்று தோன்றியது. ஏன் அப்படி கொடுக்க வேண்டும். பக்கற்றை கொடுத்திருக்கலாம் தானே. அதனை விடுத்து கைகளை ஏந்தச் செய்து கொட்டுவது பிச்சைக் கொடுப்பதாகக் காட்டும் இராஜதந்திர முறை. எமது பிச்சைக் காரர்களும் அதற்குள் சிக்குகின்றனர். – என்றார்.

# கோட்டாவுக்காக 4 ரூபாகூட செலவிடப்படவில்லையாம்!

## அடித்துக்கூறுகிறார் ரணில்



கொழும்பு, செப். 02

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்காக அரசாங்கம் 40 கோடி ரூபாவை செலவிடவில்லை என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இடைக்கால வரவு – செலவுத்திட்டம் மீதான விவாதம் நேற்று (புதன்கிழமை) ஆரம்பமாகியுள்ளது.

இந்தநிலையில் நாடாளுமன்ற அறைக்கு வருகை தந்த ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

அத்துடன், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்காக 4 ரூபாவைக் கூட செலவிடவில்லை எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

# உணவிற்கான பண வீக்கம் இம்மாத இறுதியில் 93.7 சதவீதமாக அதிகரிப்பு

கொழும்பு, செப். 02

உணவுப் பொருள்களின் விலை உயர்வு எனப்படும் உணவிற்கான பணவீக்கம் இம்மாத இறுதியில் 93.7 சதவீதம் வரை அதிகரித்துள்ளது.

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள புதிய அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டின் பொருள்கள் மற்றும் சேவைகளுக்கான பணவீக்கம் 64.3 சதவீதமாக அதிகரித்துள்ளது.

இலங்கையில் இதுவரை பதிவான விகிதங்களுடன் ஒப்பிடுகையில், பணவீக்கம் தற்போது பாரியளவில் அதிகரித்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# அரசாங்க இணையத் தளத்திலிருந்து கல்முனை வடக்கு செயலகம் நீக்கம்!



## சந்திரநேரு சந்திரகாந்தன் கண்டனம்

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கையாகவே அரச இணையத் தளத்திலிருந்து கல்முனை வடக்கு பிரதேச செயலகம் நீக்கப்பட்டமையாகும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

தமிழ்தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு சந்திரகாந்தன் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

'கல்முனை வடக்கு (தமிழ்பிரிவு) பிரதேச செயலகம் கடந்த 1989 ஆம் ஆண்டு முதல் ஒரு தனியான பிரதேச செயலகமாக 33 வருடங்களாகத் தொழிற்பட்டு வரும் நிலையில் இந்தச் செயலகத்தை இல்லாதொழிப்பதற்கான முஸ்தீபுகள் எமது சகோதர இனமான முஸ்லிம் அடிப்படை வாதிகளாலும், அரசியல்வாதிகளாலும் காலத்துக்குக் காலம் முன்னெடுக்கப்படுகின்றமை வெளிப்படையான விடயம்.

எனவே இந்த நகர்வின் ஓர் அங்கமே அரச இணையத் தளத்திலிருந்து கல்முனை வடக்கு பிரதேச செயலகம் நீக்கப்பட்டமையாகும் என சந்திரநேரு சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு–

சில முஸ்லிம் அரசியல்வாதிகள் தங்களது வங்குரோத்து அரசியலை தமது சமூகத்துக்குள் தக்கவைத்துக் கொள்வதற்காக கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயத்தை அடிக்கடி கையிலெடுத்துக்கொண்டு இரு இனங் களுக்கிடையே பிளவினை ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள்.

முஸ்லிம் அடிப்படைவாத அரசியல் வாதிகள் 'கல்முனை எம்மிடமிருந்து பறி போகப்போகிறது' என்ற போலியான வார்த்தைகளை நியாயமாக சிந்திக்கும் போக்குடைய முஸ்லிம்கள் மத்தியில் பரப்பி தமது அரசியல் இருப்பைத் தக்க வைத்துக்கொள்ளும் ஒரு தளமாக இதனைப் பயன்படுத்தி வருகின்றனர்.

இணைந்த வடக்கு, கிழக்கு, அதில் தமிழ்பேசும் மக்களுக்கான மாகாண அலகு, சிங்கள பேரினவாதத்துடன் இணையாது மாகாணத்தில் தமிழ் முஸ்லிம் மக்களை உள்ளடக்கிய மாகாண சுயாட்சி என பகல் கனவு காணும் தமிழ்த் தலைமைகள் இந்த விடயத்தில் உறங்கு நிலையில் உள்ளார்கள்.

ஹக்கீம், சம்மந்தன் போன்ற மிதவாதிகள் ஏன் இந்த விடயத்தில் முன்னின்று செயற்பட்டு புரையோடிபோயுள்ள இந்தப் பிரச்சினையை மக்களுக்குத் தெளிவுபடுத்தத் தயங்குகின்றனர்.

இந்தத் தயக்கம் 'பட்டு வேட்டி கனவில் இருந்த கல்முனை தமிழ் சமூகத்தை கோவணமற்ற நிலைமைக்குத் தள்ளியுள்ளது'. கல்முனைத் தமிழர்கள் மிகவும் பாவம் செய்தவர்கள் என்றே நான் எண்ணுகின்றேன்.

அவர்கள் தங்களது விடிவிற்காகப் போகாத தூரமில்லை. நடத்தாத போராட்டம் இல்லை. இறுதியில் விநாயகமூர்த்தி முரளிதரனை (கருணா அம்மான்) கொண்டு வந்தாவது எமது பிரதேச செயலகம் மீதான அநாவசிய அரசியல் தலையீடுகளைத் தடுப்போம் என்று ஒன்றிணைந்தனர்.

இதிலும் கல்முனை பிரதேச மக்கள் தோல்வியுற்றனர். இவர்கள் எல்லாம் இப்போது எங்கே? தற்போது அம்பாறையில் உள்ள முதுகெலும்பற்ற தமிழ் அரசியல்வாதிகளால் எமது தமிழ் சமூகம் நிர்க்கதியாக்கப்பட்டுள்ளது.

காலத்துக்குக் காலம் தமிழ்த்தேசிய கோஷத்தை எழுப்பி உசுப்பேற்றி வெறுமனே நாடாளுமன்றக் கதிரைகளை சூடேற்றிக் கொண்டிருக்கும் நபர்களை அனுப்புவதை மக்கள் கைவிட்டு, ஓரணியில் திரண்டு செயற்படாவிட்டால் தந்தை செல்வா கூறியமையைப்போன்று தமிழ் மக்களை இனி கடவுள்தான் காப்பாற்ற வேண்டி வரும். கல்முனை வடக்கு பிரதேச செயலக செயற்பாடுகளுக்கு முட்டுக் கட்டையாக இருப்பவர்கள் யார்? முஸ்லிம் தீவிரவாதப் போக்குடைய அடிப்படை வாதிகள்தான்.

அப்பாவி முஸ்லிம்கள் அல்லர். எவ்வளவு காலத்துக்கு இவர்களுடன் இணைந்து செல்லப் போகின்றீர்கள்?

கடந்த அரசாங்க காலத்தில் முஸ்லிம்களுக்கு எதிரான முன்னெடுப்புக்கள் தீவிரமடைந்தபோது 'தமிழ் முஸ்லிம் உறவு', 'தமிழ் பேசும் சமூகம் நாம்' என்றெல்லாம் பேசியவர்கள் மீண்டும் தொப்பியைப் பிரட்டியுள்ளனர்.

மதத்தை அடிப்படையாகக் கொண்டு பிரசாரங்களை முன்னெடுக்கும் போது அச்சமூகத்தில் உள்ள படித்த, பாமர மக்கள் பலிக்காடாவாக்கப்படுகின்றனர்.

கல்முனை வாழ் பூர்வீகத் தழிழர்கள் இன்று தமது வாழ்விடங்களை நாளுக்கு நாள் இழந்து வருகின்றனர்.

கடந்த நல்லாட்சி காலத்தில் கிடைத்த வாய்ப்புக்களை எல்லாம் நழுவவிட்ட தமிழ் தலைமைகள் இனி ஒன்றையும் சாதிக்கப்போவதில்லை.

அண்மையில் கல்முனை அனைத்து தமிழ் சிவில் அமைப்புக்களின் ஒன்றியத்தால் வெளியிடப்பட்ட புத்தகம் ஒன்றைப் பார்த்தேன். அதில் 'அரசியல் வாதிகளை நம்பியது போதும், அரச அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்', என கருணை மனு ஒன்றை முன்வைத்துள்ளனர். இது எதனைக் காட்டுகின்றது?

மக்கள் அரசியல் தலைமைகளில் நம்பிக்கை இழந்து விட்டனர். இதனைக் கண்கெட்டபின் சூரிய நமஸ்காரம் என்பதா? இல்லையேல் எமது தமிழ் சமூகம், அரசியல் பலத்தை சரியாகப் பாவிக்கத் தெரியதாததன் வெளிப்பாடா? ஒன்றை மட்டும் சொல்கின்றேன், இந்தப் பிரச்சினை நிர்வாக பிழையாக இருந் தாலும் இதற்குள் அரசியல் உச்ச அளவில் ஓங்கி நிற்கின்றது.

அரசியலை தவிர்த்து இங்கு எந்த இலக்கையும் அடைய முடியாது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்றால் முஸ்லிம்கள் மத்தியில் உள்ள மதவாத அடிப்படைவாதப் போக்கற்ற சிவில் சமூகங்கள் முன்வர வேண்டும்.

தமிழ், முஸ்லிம் சிவில் சமூகங்கள் அரசியல் வாதிகளைப் புறந்தள்ளிவிட்டு ஒரே மேடையில் பேச முன்வரவேண்டும். இதனை முன்னெடுக்க இரு சமூகங்களினதும் புத்தி ஜீவிகள் முன்வரத் தயாரா?

தமிழ் சிவில் சமூகங்கள் கேட்டுக் கொண்டதற்கு அமைவாக உரிய அரச அதிகாரிகளால் புரையோடிப் போயுள்ள இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க முடியும் என்பது முட்டாள் தனம்.

எனவே முஸ்லிம் அரசியல் வாதிகளும் சில முஸ்லிம் அடிப்படை வாதிகளும் தமது தனிப்பட்ட தேவைகளுக்காக இந்தப் பிரச்சினையைக் கையிலெடுக்கும் நிலமையை சீராக்க முஸ்லிம் மக்களில் உள்ள தமிழ் முஸ்லிம் மக்களின் ஒற்றுமையை விரும்பும் சிவில் அமைப்புக்கள் தமிழ் சிவில் அமைப்புக்களுடன் பேசுவதற்கு முன்வரவேண்டும்.

இதற்கான களத்தை அமைத்து தர நான் என்றும் தயாராக உள்ளேன். இதனைச் செய்ய சிவில் சமூகங்கள் தயக்கம் காட்டுமாயின் கல்முனை பிராந்தியத்தில் உள்ள தமிழ் முஸ்லிம் இனங்களுக்கிடையில் ஒற்றுமை நல்லுறவு வெகுவாகப் பாதிப்புறும்.

அத்துடன் இளைஞர்கள் மத்தியில் அடிக்கடி முரண்பாடுகள் தோன்றும். எனவே மூன்று தாசப்தகாலமாக நிலவி வருகின்ற இனங்களுக்கிடையிலான கசப்புணர்வை நீக்கி நல்லுறவைக் கட்டியெழுப்பி சமாதானமான மகிழ்ச்சியான சூழல் ஒன்றை உருவாக்கு வதற்கு முன் மாதிரியான சிவில் அமைப்புக்கள் முன்வரவேண்டுமென நான் அழைப்பு விடுக்கின்றேன்.

அதைவிடுத்து, வருடத்தில் ஒரு நாள் கல்முனை நகரத்தில் பொங்கல் பொங்குவதாலோ, மாதம் முழுவதும் நோன்பு நோற்பதாலோ எந்த சந்தோசத்தையும் நீங்கள் உங்கள் எதிர்கால சந்ததிக்கு வழங்கப்போவதில்லை என சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். – என அந்த அறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ளது.

# பெரமுனவை விட்டு வெளியேறியவர்கள் மாற்று வழியைத் தெரிவிக்கவேண்டுமாம்!

## ரோஹித அபேகுணவர்தன தெரிவிப்பு

ஸ்ரீலங்காபொதுஜன முன்னணி கட்சியை விட்டு வெளியேறியவர்கள் மாற்று வழி என்ன என்பதைத் தெளிவுபடுத்த வேண்டுமென கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்காபொதுஜன முன்னணியைச் சேர்ந்த 13 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சியை விட்டு வெளியேறி சுயாதீனமாக இயங்குவதாக அறிவித்திருந்தனர்.

இவ்வாறு வெளியேறிவர்களில் இரண்டு பேர் தேசியப் பட்டியலின் ஊடாகத் தெரிவானவர்கள் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கட்சிக்கு மக்கள் அளித்த வாக்கு எண்ணிக்கையின் அடிப்படையில் கிடைக்கப் பெற்ற தேசியப் பட்டியல் ஊடாகவே ஜீ.எல்.பீரிஸ் மற்றும் சரித ஹேரத் ஆகியோர் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.



கட்சியை விட்டு வெளியேறிய ஏனையவர்களில் அதிகமானவர்களின் நாடாளுமன்ற வயது இரண்டு ஆண்டுகளும் சில நாள்களுமேயாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு வெளியேறி சுயாதீனமாக இயங்குவதாக அறிவித்த நாடாளுமுன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற அரசியலில் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் மிக அதிகம் எனத் தெரிவித்துள்ளார்.

நாடு நெருக்கடியான நிலையை எதிர்நோக்கியுள்ளதாகவும் தற்பொழுது அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண் டுமெனவும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் அனைவரையும் இணைந்து செயற்படுமாறு தொடர்ச்சியாக கோரி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## திருகோணமலை (ஏமாற்று வித்தைகள்) தந்த தலைவலி

அங்கம் - 110

இனப் பிரச்சினைக்கான தீர்வு ஒன்று மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தத்தில்தான் ஏற்பட வேண்டும் என்ற யதார்த்தத்தின் புரிந்துணர்வு நாட்டின் எல்லா மட்டங்களிலும் இருந்தாலும் –

பிராந்திய அதிகாரத்தில் இந்தியாவின் அதிகாரமும் ஈடுபாடும் தவிர்க்க முடியாதவையாயினும், அதனால்தான் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் –

தென்பகுதியில் எல்லா அரசியல் தரப்புகளும் அதனை (ஒப்பந்தத்தை) வைத்து அதிகாரத்துக்கு வருவதிலேயே குறியாய் இருந்தன.

இன்றையநாள்களில்காலிமுகத்திடல் போராட்டம் எப்படி மக்களின் உணர்வுகளிலிருந்து அத்தியாவசிய தேவைகளுக்காக எழுந்து, நாட்டைப் பரிபாலித்த ஜனாதிபதி பதவி விலக வேண்டும் எனக் கோரி, பின் ஊழல்கள் அம்பலப்படுத்தப்பட்டு, அரசை மாற்ற வேண்டும், அதனை வீழ்த்த வேண்டும் என்று ஓடியதே ஒழிய அது நாட்டின் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் காண வேண்டும் என்று குரல் எழும்பவில்லை. அவை இழையோடபட்டன. அவ்வளவுதான். அவற்றில் ஆணித்தரங்கள் எதுவும் இருக்கவில்லை.

அது போலவே அப்போதும் மூலப் பிரச்சினையை விட்டு விட்டு, ஆட்சி மாற்றத்துக்கு அதனை எப்படிப் பயன்படுத்துவது என்பது பற்றியே சிந்திக்கப்பட்டது.

இந்திய ஒப்பந்தம் நாட்டின் பிரிவினைக்குக் கொண்டு செல்லும் என்ற வழமையான மனப்பாங்குகளில் மக்கள் தாங்களாகவே அதற்கு எதிராகக் கிளர்ந்து எழுந்து, உணர்ச்சிகளை கொட்டி, எதிர்ப்புகளைத் தெரிவித்தாலும், முக்கிய எதிர்க்கட்சியாக இருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் மற்றும் ஜே.வி.பியும் அதனைப் பாவித்து ஜே.ஆரின் அரசை வீழ்த்தி, அதிகாரத்தை கைப்பற்றவே முனைந்தன.

புரையோடிப் போயிருக்கும் இனப்பிரச்சினைக்கு ஒப்பந்தம் ஏதாவது தீர்வை கொண்டு வருமா என்பது எதுவும் சிந்தனைகளில் இருக்கவில்லை. அரசை வீழ்த்தும் உத்தியாகவே ஒப்பந்த எதிர்ப்பு பார்க்கப்பட்டது.

ஆகவே ஜே.ஆருக்கு அழுத்தம் தரக்கூடிய விதத்தில் ஜே.வி.பி. சிங்கள மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டக்கூடிய உத்திகளில், அவர்கள் குடியிருந்த எல்லையோரப் பகுதிகளில் இருந்து அவர்களை விரட்டி அடித்து, இவை இந்தியப் படைகள் நாட்டுக்குள் வந்தமையால் அவர்களின் ஆதரவுகளில் செய்யப்படுகின்றன என்ற பிரச்சாரங்கள் கிளப்பி விட வழிசெய்தது.

அவர்கள்செய்தசிலசிறிய இராணுவத் தாக்குதல்களும், பின்னர் கல்லாறு இராணுவ முகாமை ஆயுதங்களுக்காக முற்றுகையிட்டமை போன்றவை எல்லாம் ஜே.வி.பியில் தொடுக்கப்படாது, அடக்கி வாசிக்கப்பட்டு, மற்றத் தமிழ்க் குழுக்களிலே சாட்டப்பட்டு, பிரசாரங்களாகப் பாவிக்கப்பட்டன. அவற்றிற்கு ஸ்ரீலங்காப் புலனாய்வும் இந்தியாவின் றோவும் இணைத்தே இயங்கின.

தமக்குப் பலத்த நெருக்கடிகளைத் தரக்கூடிய நிலையில் ஜே.வி.பி. இல்லை என்ற பாவனையைக் காட்டிக்கொள்ளவே ஜே.ஆர். விரும்பினார்.

ஆனால் ஜே.வி.பி. தொடர்ந்த நேரடி தாக்குதல்களும், தம்பலகாமத்தில் 14 இந்திய வீரர்கள் கொல்லப்பட்ட தாக்குதலை விடுதலைப் புலிகள் தங்களுடையதாக உரிமை கோராதமையும், உண்மையை மறைத்துப் பிரசாரங்கள் ஏற்படுத்த வழி தரவில்லை.

இந்திய படைகள் நேரடியாக ஜே.வி.பியினருடன் மோதுவதா? அதன் விளைவுகள் என்ன? அது தொடர்பில் ஜே.ஆரின் நிலைப்பாடு என்பவற்றில் தூதரகத்துக்குள்ளேயே அபிப்பிராயங்கள் மாறுபட்டன.

தனது அதிகாரங்களைப் பாதுகாப்பதற்காக தென்பகுதிகளின் கட்டமைப்புகளைச் சீராக தனது படைகளின் மேற்பார்வையிலேயே வைக்க வேண்டும் என ஜே.ஆர். உறுதியாக நின்றார். ஒப்பந்தத்தின் அடிப்படையில் வடக்கு,கிழக்கில் அவரது படைகள் முகாம்களுக்குள் முடக்கப்பட்டு இருந்தன. மற்ற பகுதிகளிலும் அவை முடக்கப்படுவதை அவர் விரும்பவில்லை. அதேசமயம் இரு பகுதியினரும் கூட்டாக இயங்கவும் தயக்கங்கள் இருந்தன.





ஆனால் திருகோணமலையில் நடந்து கொண்டிருந்த பல ஏமாற்று வித்தைகளும் அவற்றில் வந்த குழப்பமான உளவுத் தகவல்களும் அவருக்குப் பெருத்த தலையிடியைக் கொடுத்தன.

இந்திய ஒப்பந்த காலங்களில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுடனும், விடுதலைக் குழுக்களுடனும் அவர்களது கோரிக்கைகளாகப் பேசப்பட்ட விடயங்கள் கவனிக்கத்தக்கவை. அவை, தமிழீழத்தின் எல்லைப் பகுதிகளில் ஜே.ஆரினால் நடத்தப்பட்ட கட்டமைக்கப்பட்ட குடியேற்றங்களும், அவற்றுக்கு அவரது மகன் ரவி ஜெயவர்த்தனா பொறுப்பு நின்று நடத்தியதும், பாதுகாப்பு மந்திரி லலிதா அத்துலத் முதலி தென் பகுதிகளில் குற்றவாளிகளாகக் காணப்பட்டு சிறை தண்டனை பெற்றவர்களை பதவியா, மணலாறு, ஒதியமலை, நெடுங்கேணி போன்ற பகுதிகளில் குடியேற்றி அவர்களது கைகளில் பாதுகாப்பு என்ற பெயரில் ஆயுதங்களும் வழங்கியிருந்தமை போன்றவையாகும்.

திருகோணமலையில் 1983ல் நடந்த அட்டூழியங்கள் பற்றியும், அங்கு நடக்கும் இன விகிதாசார மாற்றங்கள் பற்றியும் நாடாளுமன்ற அங்கத்தினர் ஜே.ஆருக்கு நீண்ட கடிதம் ஒன்று அனுப்பியிருந்தார்.

அமிர்தலிங்கம் 1978 இல் இருந்தே வவுனியாவில் சமனாளங்குளம் பிள்ளையார் கோவில், மகாவெவாவில் காணி அபகரிப்பு, மதவாச்சியில் மூன்று உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவிகள் வர்த்தமானி பிரகடனத்தால் வவுனியாவுடன் இணைக்கப்பட்டமை, மதவாசி பகுதிகள் வவுனியாவுடன் ஒன்றாகச் சேர்த்தமை, வவுனியா வடக்கு வெண்கலச் செட்டிக்குளம், வவுனியா தெற்கு தமிழ் பகுதிகளை மீண்டும் ஒரு நிர்வாக அலகாக மாற்றுவது என்பன போன்றவற்றைச் சுட்டிக்காட்டி வந்தார்.

புல்மோட்டை, ஈச்சலம்பற்று, காரைத்தீவு போன்ற பல விடயங்கள் நிலுவையில் இருந்தன. தமிழ்த் தரப்புகள் தங்களது பேச்சுவார்த்தைகளில் இவை வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குக் கீழ வர வேண்டும் என வலியுறுத்தி இருந்தன.

ஆனால் ஆயுதக்களைவு என்ற ரீதியில் அவர்களிடம் இருந்தும் ஆயுதங்கள் மீள பெறப்பப்பட வேண்டும் எனவும், ரவி ஜெயவர்த்தனாவினால்உருவாக்கப்பட்டு, அவரின் மேற்பார்வையில் இருக்கு விசேட அதிரடிப்படை அமைப்பும் கலைக்கப்பட வேண்டும் என்பதும் அமிர்தலிங்கத்தின் நிபந்தனையாக இருந்தது.

ரவி ஜெயவர்த்தனாவின்ன் கட்டுப்பாட்டில் இருந்த விசேட அதிரடிப்படை தமிழ் பகுதிகளிலே பல கோரமான தாக்குதல்களை நடத்தியது மட்டுமல்லாமல் எல்லைப்புற கிராமங்களுக்குப் பாதுகாப்பிலும் இருந்தது. எல்லைப்புறக் கிராமங்களில் இருந்து ஆயுதங்களை மீள பெறுவதற்கும், விசேட அதிரடிப்படை அந்த பகுதியில் இயங்காமல் இருப்பதற்கும் ஜே.ஆர். ஒத்துக்கொண்டாலும் இந்திய பகுதிகளுக்கு அதில் நம்பிக்கை இருக்கவில்லை. மாவட்டங்கள் ஏற்கப்பட்டு, மக்கள் எப்பகுதிகளுக்குப் போவது என்ற சில்லடுப்பு பலகாலங்கள் எடுக்கலாம் எனக் கணித்த றோ தடை செய்யப்பட்ட குழுக்கள் மூலம் கிழக்குப் பகுதியிலும், வவுனியா, மன்னார் மாவட்டங்களிலும், அவற்றின் எல்லைகளிலும் உள்ள 'அத்துமீறிய குடியேற்றங்களைக் கவனிப்பது' என்று ஒழுங்கை வகுத்தது.

ஆனால், தங்களது உளவுகளால், மஞ்சள் காமாலை நோயின் தாக்கங்களால், விடுதலைப் புலிகள் இவற்றை எதிரான நோக்குடனும், தங்களது ஏகோபித்த தலைமைக்கு இடைஞ்சல் தர இறக்கப்படுகின்றார்கள் எனவும் கணித்து, அவர்களைத் தாக்குவதில் ஈடுபட, இவர்கள் தங்களது பழையதும் புதியதுமான உறவுகளால் ஜே.வி.பியின் ஆதரவை நாட, அவர்களை ஜே.வி.பி. தங்களின் தாக்குதல்களில் பாவிக்க, விடுதலைப் புலிகளில் மார்க்ஸிய தத்துவங்களில் ஆர்வம் காட்டி ஜே.வி.பியுடன் ஓரளவு நட்புறவை பேணிய மனோ மாஸ்டர், பண்டிதர், மாத்தையா போன்றவர்கள் இந்தியப் படைக்கு எதிராக அவர்களது ஆதரவைத் தேடி இயங்க, திருகோணமலை, வவுனியா எல்லப்புறம் மாவட்டங்கள் ஜே.ருக்குச் சிக்கெடுப்பாக வளர்ந்தன.

அவர் இவை எல்லாவற்றுக்குமே இந்திய படைகளின் பாராமுகத் தன்மையும், அவர்கள் விடுதலைப் புலிகளையும் மற்றைய குழுக்களையும் தொடர்ந்து ஆயுதங்களைப் பாவிக்க அனுமதிப்பதையும் குற்றமாகச் சுட்டிக் காட்டினார்.

இடையில் குழப்பமான புலனாய்வு, உளவுத் தகவல்கள், நாட்டில் நிலை கொண்டிருந்த அரசியல் நிலைப்பாடுகள், வளரும் இந்திய எதிர்ப்பலைகள் என்பவற்றை ஆராய்ந்து தூதரகத்தின் அரசியல் காரியதரிசிகளும் சில அபிப்பிராயங்களும் வந்திருந்தனர்.

(வளரும்...)

# அந்தப் பருப்பு இங்கே வேகாது



என்.சத்தியமூர்த்தி



தனது உளவு கப்பல் 'யுவான் வாங் 5' விவகாரத்தின் மூலம், அண்டை நாடான இந்தியாவுடனான இலங்கையின் உறவை சீண்டி பார்த்த சீனா, தற்போது அடுத்த கட்டத் தாக்குதலுக்குத் தயாராகி வருகிறது என்றே தெரிகிறது. கடந்த வருடம் யாழ்பாண விஜயத்தை மேற்கொண்ட சீன தூதுவர் கீ சொன்ஹாங். மீண்டும் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளுக்கு வருகைதரப் போவ தாக செய்தி வெளியாகி உள்ளது.

அந்த செய்தி உண்மையானால், சீன தூதுவர் தமிழர் உணர்வுகளை பற்றி இன்னமும் உணரவில்லை என்பதையே அது எடுத்துக் காட்டுகிறது. அல்லது, தமிழர் உரிமைகளுக்கு அவர் ஒரு விலை கற் பித்து, அந்த அஜெண்டாவிலேயே தொடர்ந் தால், தங்களது எதிர்பாஜுப்புகளை நிறை வேற்றிக் கொள்ளலாம் என்று கனவு காண்கி றார் என்று எண்ணத் தோன்றுகி றது.

இவ்வாறு கருதுவதற்கு காரணம் இருக்கிறது. இலங்கை தமிழர்களின் இந்தியாவுடனான தொப்புள் கொடி உறவு உலகம் அறியாததல்ல. என்றாலும், தாயும் பிள்ளையும் ஆனாலும், வாயும் வயிறும் வேறு தான். அந்த விதத்தில், இந்திய அரசிற்கும் இலங்கை தமிழர் தரப்பிற்கும் இடையே சில பல கருத்து வேறுபாடுகள் இருந்து வருகின்றன. அதற்காக, அந்த தொப்புள்கொடி உறவை அறுத்தெறிந்து விட முடியும் என்று சீனா கனவு காண்கிறது. அல்லது, இத்தனை ஆண்டுகளும் இல்லாமல், தற்போது பகற்கனவு காணத் துவங்கி உள்ளது.

இனப்பிரச்சினை மற்றும் ஐ.நா. மனித உரிமை குழு விவகாரத்தில், இந்தியா, தமிழர் ஆதரவு அல்லது நடுநிலைமை எடுத்து வருகிறது. இந்தியாவின் இந்த நடுநிலைமைக்கு காரணமே எப்படியாவது, இலங்கை அரசு மற்றும் தமிழர் தரப்புகள் தங்களுக்குள்ளேயே பேச்சுவார்த்தை மூலம், இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை முடிவுசெய்து கொள்ளமாட்டார்களா, என்ற அதீத ஆவலும் எதிர்பார்ப்பும்தான். எங்கே, தற்போதைய தருணத்தில், இந்தியா, அதிக அழுத்தம் கொடுத்ததால், குயவன் கை மண்சட்டி போல, பிரச்சினைகள் கை மீறி போய்விடுமோ என்ற கவலைதான்.

### கொச்சைப்படுத்தும் நப்பாசை

இதற்கு எதிரான, சீனாவின் முஸ்தீபுகள், தமிழர் தரப்பை கொச்சைப்படுத்தும் வித மாகவே அமைந்துள்ளன. அவர்களைப் பொறுத்தவரையில், தமிழர் ஆதரவு நிலையை எடுக்க சீனா தயாரில்லை. மாறாக, அண்மையில் கூட சீன தூதுவர் கீ சொன்ஹாங், ஐ.நா. மனித உரிமை குழுவில், இலங்கை அரசிற்கு தொடர்ந்து ஆதரவு அளிக்கப் போவதாக அறிவித் துள்ளார். அவருடைய கருத்துக்கள், குறிப் பாக இந்தியாவைக் குறி வைத்தாலும், அதன் முடிவுகள் தமிழர் தரப்பை பாதிப் பதாகவே அமையும்.

என்றாலும், சீனதூதுவர் வடக்கு-கிழக்கு பகுதிகளுக்கு விஜயம் செய்யப் போகிறார் என்றால், உளவு கப்பல் விவகாரத்திற்கு பின்னர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசினை ஆழம் பார்க்கிறார் என்பதும் தெளிவு. அதை விட முக்கியமாக, தமிழர் பகுதிகளுக்கு சென்று சில எலும்பு துண் டுகளை தூக்கி எறிந்து விட்டால் போதும், அந்த சில அமைப்புகளாவது, தங்கள் சொல் பேச்சு கேட்கும் என்ற நப்பாசையும் சீனாவின் எண்ணவோட்டத்தில் இருப்பது தெளிவாகிறது.

அதாவது, சீனாவைப் பொறுத்தவரை யில், தமிழர் தரப்பு தங்களை ஆதரிக்கின் றனவோ இல்லையோ, அவர்கள் இந்தியா வுடனான உறவை முறித்துக் கொள்ள வேண் டும். அதாவது, இனப்பிரச்சினை விடயத்தில், சீனா, தொடர்ந்து இலங்கை அரசையே ஆதரித்து செயல்படும். ஆனால், தமிழர் தரப்பு, இந்தியாவுடனான உறவை முறித் துக் கொள்ளும் என்று எதிர்பார்க் கிறது.

### சர்வதேசத்திற்கும் சவால்

தமிழர் தரப்பு, அதிலும் குறிப்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு, இனப்பிரச்சினை கான முடிவு மற்றும் ஐ.நா. விவகாரங்கள் குறித்து எல்லாம் பேசும் போது, சர்வதேசத் தையே துணைக்கு அழைப்பது வழமையாகி விட்டது. சர்வதேசம் என்று கூட்டமைப்பு தலைவர் சம்பந்தனும் பிறரும் குறிப்பிடு வதெல்லாம், அமெரிக்கா தலைமையி லான மேற்குலக நாடுகள் மற்றும் அவர் களை அண்டி அரசியல் செய்யும் ஐ.நாவின் துணை உறுப்புகள்தான்.

அந்த வகையில், கூட்டமைப்பை பொறுத்தவரை, அவர்களின் இந்தியா உறவு, ஊறுகாய் போல மாற்றப்பட்டு வரு டங்கள் பல ஆகிவிட்டன. ஆனால், புவி சார்ந்த அரசியலின் அண்மை கால நிகழ் வுகளை நோக்கினால், மீண்டும், மேற்குல கம், அதிலும் குறிப்பாக, தெற்காசிய விவ காரங்களில், இந்தியாவின் கருத்துக்களை மதித்து செயல்படுவதாகவே தோன்று கிறது. அதாவது, தெற்காசியா மற்றும் அது சார்ந்த இந்திய பெருங்கடல் பகுதி யில், இந்தியாவின் முடிவுகளுக்கு செவி சாய்க்க அமெரிக்கா துவங்கி உள்ளது.

சீன உளவுக் கப்பல் விவகாரத்தில், அவ்வாறு நடந்ததாக சீனத் தூதுவரே கூறியிருந்தார். ஆனால், இந்த உண் மை யை புரிந்து கொள்ள, தமிழர் தரப்பு, அதிலும் குறிப்பாக, சர்வதேசம் குறித்து மூச்சுக்கு முன்னூறு தரம் பேசும் கூட்ட மைப்பு தலைமைக்கு எவ்வளவு கால அவ காசம் தேவை என்று தெரியவில்லை.

பிரச்சினை அதுவல்ல. தனது தூதுவ ரின் யாழ்பாண விஜயங்களால், இந்திய-தமிழர் தரப்புகளை சீண்டி பார்க்கும் சீனா, அதன் காரணமாகவே, தமிழர் தரப்பு வெகுவாக நம்பியிருக்கும் சர்வதேசத்தை யும் வம்புக்கு இழுக்கிறது என்பதே உண்மை. இதனையும் கூட்டமைப்பு எவ்வாறு புரிந்து கொண்டி ருக்கிறது என்று தெரியவில்லை.

### புலம்பெயர்ந்தோர் முயற்சி

இனப்பிரச்சினை குறித்த தீர்வுதிட்டங் கள் ஆகட்டும், அல்லது போர் குற்றங்கள் குறித்த ஐ.நா. மனித உரிமைக் குழுவின் முன்னெடுப்புகள் ஆகட்டும், தமிழர் தரப் பிற்காக வலிந்து முயற்சிகளை முன்னெ டுத்து வருவதில், உள்ளூர் கட்சிகள் அள விற்கு, புலம்பெயர்ந்தோரின் பல்வேறு அமைப்புகள் சளைத்தவை அல்ல. என்ன, உள்ளூர் கட்சிகளைப் போலவே, புலம் பெயர்ந்தோரும் பல்வேறு வகையாகப் பிரிந்தே நிற்கிறார்கள்.

ஆனால், தமிழர் தரப்பு சர்வதேசத்தின் முயற்சியால் மட்டுமே, இனப் பிரச்சினைக் கான நல்ல முடிவை எட்ட முடியும் என்ப தில் அவர்கள் அனைவ ருக்குமே ஒன்று போன்ற கருத்து உள்ளது. அந்த விட யத்திலும் அவர்கள் தனியாவர் தனமே வாசித்து வருகிறார்கள் என்பது வருத்தப்பட வேண்டிய ஒரு செய்தி.



இந்தப் பின்னணியில், இது வரையில், மேற்குலக நாடுகளை அண்டி அரசியல் செய்யும் புலம் பெயர்ந்தோர் அமைப்பு களில் எதுவுமே, சீனாவின் வழி செல்வ தாகச் செய்திகள் இல்லை. அல்லது, அவ் வாறு யாரேனும் உள்குத்து வேலைகள் செய்கிறார்கள் என்றால், அது குறித்தும் செய்திகள் இல்லை.

### குளிர் காய்வதே குறி

அதே சமயம், சீன தூதுவர் கடந்த டிசெம்பர் மாதம் யாழ்பாணம் வந்த போது, அவருக்கு சேவகம் செய்ய, தமிழர் தரப் பிலேயே சிலர் தயாராக இருந்தார்கள் என்று தெரிய வந்தது. அதில், தமிழர் உரி மைகள் குறித்து பேசும் சில - பல தமிழ் பத்திரிகையாளர்களும் இருந்தார்கள்.

அது போன்றே, சீன தூதுவரிடம் இருந்து நிவாரண உதவி பைகளை தமிழ் மீனவர்களுக்கு பெற்று தருவதற்கும் சிலர் முனைப்பாக காரியம் ஆற்றினார்கள். அவருடைய எண்ணமே, தமிழ் மீனவர்க ளுக்கு உதவுவது அல்ல. மாறாக, இலங்கை - இந்திய தமிழ் பேசும் மீனவர்களிடையே தொடர்ந்து வரும் பிரச்சினைகளில் குளிர்காய்வதுதான். அதில் தனக்கு ஜே போடும் ஒரு தமிழர் மீனவர் கூட்டம், சீன தரப்பிற்கு தேவை. அவ்வளவு தான்.

ஆனால், அதற்கு கூட அவசியம் இல்லாமல், கடந்த முறை விஜயத்தின் போதே, சீன தூதுவரே சில காரியங்களை முன்னெடுத்தார். அவருடைய இலக்கே இந்தியா - இலங்கை, அதிலும் குறிப்பாக தமிழர் பகுதிகளை உள்ளடக்கிய கடல் பிரந்தியம்தான். அங்கு கடந்த விஜயத்தின் போது. அவர் படகு மூலமாக சென்று, பார்த்து வந்தார். அவர் வென்றுவிடும் அளவிற்கு, இந்திய - இலங்கை கடல் பாதுகாப்பு குறைந்திருக்கவில்லை என்ப தையும் அவர் பார்த்து, புரிந்து கொண்டி ருப்பார் என நம்பலாம்.

தற்போது கூட ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வந்த சீன உளவு கப் பல், அங்கிருந்து இந்திய பெருங்கடலின் தெற்கு மற்றும் தென் கிழக்கு பகுதியில் கடல் படுகை குறித்த ஆய்வுகளை மேற் கொண்டு வருவதாக செய்திகள் தெரி விக்கின்றன. அந்த கடல் பகுதி, அமெ ரிக்காவின் டீகோ-காசியா இராணுவ தளத்தில் இருந்து வெகு தூரத்தில் இல்லை.

அதாவது, இந்தியாவை மிரட்டுவதாக போக்கு காட்டி விட்டு, சீனா, அமெரிக்கா விடமே வாலாட்டுவதற்கு இலங்கையை பயன்படுத்திக் கொண்டுள்ளது. இந்த நிலை தொடரவேண்டுமா, என்று கொழும்பு அரசாங்கமும் தென்னிலங்கை அரசியல் தலைமைகளும் முடிவு செய்யவேண்டும். அதற்கு, அதிக கால அவகாசம் இல்லை.

### குழம்பிய குட்டை

இந்த சூழ்நிலையில் யாழ் பல்கலை கழக தமிழர் மாணவர் ஒன்றியம், சீன தூதுவரை கண்டிந்து வெளியுட்டுள்ள அறிக்கை குறிப்பிடத்தக்கது. தமிழர்க ளின் அனைத்து தரப்புகளும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை, ஐ.நா. மனித உரிமை குழு நாடவேண்டும் என்று கடிதம் எழுதியுள்ள போது, சீன தூதுவர் மட்டும், அரசிற்கு ஆதரவாக தனியாவர்த்தனம் வாசிப்பதை நிறுத்த வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

மாணவர் ஒன்றிய கூற்றின் படி, சீன தூதுவர் குழம்பிய குட்டையில் மீன் பிடிப் பதை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று கூறி உள்ளனர். அரசு ஆதரவு டுலீட்டை யும் அவர் பினவாங்க வேண்டும் என்றும் அவர்கள் தங்களது வேதனையை வெளிப்படுத்தி உள்ளனர். ஆனால், சீனா அதற்கு செவிசாய்க்கப் போவது இல்லை என்பதே உண்மை.

ஆனால், அதுவே தான் உண்மை நிலைமை. கொழும்பு சார்ந்த இராஜதந் திர வட்டாரங்களில் தனது சரக்கு போணி ஆகவில்லை என்று தெரிந்ததும், சீன தூதுவர், ஐ.நா. சார்ந்த பிரச்சினையை கையிலெடுத்து, நாட்டை இன ரீதியாகத் துண்டாட நினைக்கிறார். அதற்கு, தமிழர் தரப்பிலிருந்தே எட்டப்பர்களுக்கு வலை விரிக்கிறார்.

கடந்த முறை தமிழ் மீனவர்களில் சிலருக்கு மட்டும் வழங்கிய நிவாரண உதவிகள் வெறும் தூண்டில் புழு தான். ஆனால், முப்பது ஆண்டு கால இனப் போரின் போது, பசி - பட்டினி, உயிர் மற்றும் பொருள் சேதம் ஆகியவற்றை அனுபவித்துவிட்ட தமிழர்களுக்கு, அவர் வழங்கிய உதவி என்பது, அவர்களின் உணர்வுகளையும் கேலி செய்வது போல் ஆனது.

அதனால் தான், உணவு முதலான பொருள்களின் தட்டுப்பாடு உச்சகட்டத்தில் இருந்த போதும், தமிழர்கள் அசரவில்லை. அவர்களது, சிங்கள உறவுகளே முன் பின் பழக்கம் இல்லாத காரணத்தினால், பெரிய துன்பங்களுக்கும் அதிர்ச்சிக்கும் உள்ளானார்கள். அதன் பிறகாவது, அந்த பருப்பு இங்கே வேகாது என்பதை சீனா புரிந்து கொண்டிருக்க வேண்டும்.

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்

# விநாயகர் பெருமை



தடைகளை விலக்கி நாம் தொடங்கும் எல்லா செயல்களிலும் வெற்றியை அளிப்பவர் கணபதி. விநாயகருக்கு உகந்த 25 தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

1. விநாயகரின் ஐந்து கைகளில் உள்ளவை.
– துதிக்கையில் தண்ணீர்க்குடம்.
– பின் இரண்டு கைகளில் அங்குசம், பாசம்.
– முன் கைகளில் வலது கையில் தந்தம்.
– இடது கையில் மோதகம்.

2. விநாயகரை ஒரு முறை வலம் வருதல் வேண்டும்.

3. மகாபாரதத்தை வியாசர் சொல்லச் சொல்ல விநாயகர் எழுதினார்.

4. விநாயகர் பயிர் தொழிலுக்குரிய தெய்வம் என்று சொல்லப்படுகின்றார். அதாவது பயிரை அழிக்கக் கூடிய பெருச்சாளியைத் தமது வாகனமாக்கி அடக்கி வைத்துள்ளார் என்பது இதன் பொருள்.

5. விநாயகரின் வாகனங்கள் மயில், காளை, சிங்கம், யானை, குதிரை, பூதம் முதலியனவாகும்.

6. வெள்ளிக் கிழமை தோறும் அருகம்புல், தேங்காய் ஆகியவற்றினைக் கொண்டு கணபதி ஹோமம் செய்து வந்தால், நீண்ட ஆயுளும், செல்வமும் கிடைக்கும்.

7. விநாயகரின் மந்திரம் 'ஓம் கம் கணபதியே நமஹ' என்பதாகும். காலை மாலை 108 தடவை இந்த மந்திரத்தை சொல்லி வந்தால் சகல நன்மைகளும் உண்டாகும்.

8. பல்லவர் காலக் கோவில்களில் பரிவார தேவதையாக முதன் முதலாக அமைக்கப் பெற்ற கணபதி காஞ்சி கைலாசநாதர் கோவிலில் காணப்படுகின்றார்.

9. பஞ்சபூதத் தொடர்பு உடையவர் விநாயகர். இவர் அரச மரத்தடியில் ஆகாய வடிவாகவும், வாதநாராயண மரத்தடியில் வாயு வடிவமாகவும், நெல்லி மரத்தடியில் நீர் வடிவமாகவும், ஆல மரத்தடியில் மண்வடிவமாகவும் விளங்குகின்றார்.

10. விநாயகப் பெருமான் பிரணவம் ஆகிய ஓங்கார மந்திர சொரூபமாய் விளங்குபவர்.

11.இப்வுலகில் விநாயகரின் பரிபூரண அருளைப் பெற்று வாழ்ந்தவர் புருசுண்டி என்ற முனிவர். இவர் விநாயகரைப் போல் துதிக்கையுடன் கூடிய தோற்றத்தில் காணப்பட்டார்.

12. விநாயகர் உருவத்தில் எல்லா கடவுள்களும் உள்ளனர். நாபி – பிரம்ம உருவம், முகம் – விஷ்ணு, கண் – சிவரூபம், இடப்பாகம் – சக்தி, வலப்பாகம் – சூரிய ரூபம் என்று கருதப்படுகிறது.

13. விநாயகருக்கு தேங்காய் எண்ணெய் காப்புத் தான் மிகவும் பிரியமானது.

14. விநாயகர் ஏற்காத இலை துளசி இலை.

15. விநாயகப் பெருமானின் அருளைப் பெற்றோர் அவ்வையார், நம்பியாண்டார் நம்பி, சேந்தனார்.

16. பிள்ளையார் சுழியில் உள்ள ஐந்தெழுத்துத் தத்துவம் நமசிவாய என்பதாகும்.

17. விநாயகர் புகழ் பாடும் நூல்கள்: ஸ்ரீகச்சியப்ப முனிவர் அருளிய விநாயகக் கவசம், ஸ்ரீவிநாயக சப்தகம், ரோடச கணபதி ஸ்துதிகள், ஸ்ரீகணேச புஜங்கம், ஸ்ரீகணேச பஞ்ச ரத்னம், ஸ்ரீகணேச வைகறைத் துதி, அவ்வையார் அருளிய விநாயகர் அகவல், ஸ்ரீகணேஷாஷ்டகம்.

18. விநாயகர் என்றால் அவரை விட மேலான ஒருவர் இல்லை என்று அர்த்தமாகும்.

19. விநாயகர் சதுர்த்தி விழா மராட்டியத்திலும், ஆந்திராவிலும் 11 நாள்கள் வழிபாடாகக் கொண்டாடப்படுகின்றது.

20. பிள்ளையாருக்கு ஞானக்கொழுந்து என்றொரு பெயருண்டு. ஞானத்தை அருள்வதற்காக விநாயகர் அரச மரத்தடியில் அமர்ந்துள்ளார்.

21. வைணவ கோவில்களில் அமைக்கப்பட்டுள்ள விநாயகர் தும்பிக்கையாழ்வார் என்று அழைக்கப்படுகின்றார்.

22. கணபதிக்கும், சனீஸ்வரனுக்கும் பிரியமானது வன்னி மரம். எனவே, வன்னிமர இலைகளால் விநாயகப் பெருமானை வழிபட்டால் சனிபகவான் தொல்லைகள் நீங்கும்.

23. கணபதி வழிபாடு என்பது காணா பத்யம் என்றழைக்கப்படுகிறது. இது ஆதிசங்கரர் சிறப்பித்த வழிபாடு ஆகும்.

24. விநாயகப் பெருமான் சித்தி, புத்தி என்ற தம் மனைவியர் மூலம் உருவாக்கியவர்தான் சந்தோஷி மாதா ஆவார்.

25. விக்னம் என்றால் கஷ்டம். கஷ்டங்களை அகற்றுபவர் என்பதால் விக்னேஸ்வரர் என்கிற பெயர் விநாயகருக்கு ஏற்பட்டது.

## நல்லூர் பேராலய வரவேற்புக் குறியாக திகழும் அலங்காரத் தோரண வாயில்



பெருமை மிக்க நல்லூர் கந்தசுவாமி பேராலய வரவேற்பு அலங்காரத் தோரண வாயில் யாழ் செம்மணி வீதியில் அமைக்கப்பட்டுள்ளது.

நல்லூர் முருகன் தண்ணீர் பந்தல் சபையாரின் முயற்சியால் இந்த வளைவு அமைக்கப்பட்டுள்ளது. முன்னாள் அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் அவர்களின் நிதி ஒதுக்கீடு இம்முயற்சியில் பெரும் பங்காற்றியிருக்கிறது.

அதே வேளை, இந்த அலங்காரத் தோரண வாயில் தமிழகத்து சிற்பாசாரியாரான கலியப்பெருமாள் புருஷோத்தமன் குழுவினரின் கைவண்ணத்தில் எழுச்சி கண்டிருக்கிறது

தேவஸ்தான அறங்காவலரான குகஸ்ரீ. குமாரதாஸ் ஸயந்தன மாப்பாண முதலியார் அவர்களது எண்ண அமைப்பில் செழுமைப்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் இந்த அலங்காரத் தோரணம் யாழ்ப்பாண நுழைவாயிலில் சைவப்பண்பாட்டு அழகை ஏற்படுத்தி நிற்கிறது.

நல்லூரானின் கோபுரத்தைப் பிரதிபலிக்கும் அமைப்பில் சூழவும் நான்கு சிறு விமானங்களோடு நான்கு நெடிய தூண்களில் இந்த அலங்கார தோரண கோபுரம் எழுச்சி காண்கிறது.

விநாயகர், பிரணவோபதேச மூர்த்தியான சுவாமிநாதர், வல்லி தேவசேனா சமேத ஷண்முகர், சக்திதரர், பால சுப்ரமண்யர் ஆகிய சிற்பங்கள் மேல் மாடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

நம் இந்து பாரம்பரியப்படி கஜலக்ஷ்மியுடன் கூடிய இந்த மங்கல த்வாரத்தின் சம்ப்ரதாய பூர்வமான திறப்புவிழா தைமுதல் நாள் (14.01.2021) நிகழ்ந்தது.

அந்த வகையில், தை பொங்கல் திருநாளான அன்று வளர்பிறை த்விதீயையும் திருவோண நட்சத்திரமும் குருவாரமும் கூடிய சுப நாளில் மதியம் மீன லக்ன சுபமுகூர்த்தத்தில் திறப்பு வைவபம் நடந்தது.

இந்த திருப்பணியானது யாழகத்தின் முதன்மையான – புதிய அடையாளமாக – எங்கள் பண்பாட்டின் எழில் வடிவாக – காட்சி தருவதோடு, நம் முருகவேளை எல்லோர் மனதிலும் நிறையச் செய்து முருகனருளை பெருக்கும்.

'எல்லையில் கருணை ஸ்கந்தனாம் எம்பிரான்
நல்லையில் கோயில்கொள் நம் ஷண்முகநாதன்'

- தியாக. மயூரகிரிக்குருக்கள் -

# பதிகமும் பொழிப்பும்


பாடல் – 10

வெஞ்சொல்தஞ்சொல் லாக்கிநின்ற வேடமிலாச் சமணும்
தஞ்சமில்லாச் சாக்கியருந் தத்துவமொன் றறியார்
துஞ்சலில்லா வாய்மொழியால் தோத்திரநின் னடியே
நெஞ்சில்வைப்பார் இடர்களையாய் நெடுங்களம்மே யவனே.

பொருள்:–

தகிக்கும் வெம்மையோடு, சூடான கடுஞ்சொற்களையே தங்கள் வார்த்தைகளாக்கிக் கொண்டவர்களான சமணர்களையும், தமது வேடத்திற்குச் சற்றும் பொருந்தாத அன்பே இல்லாத கருணையே காட்டாத சாக்கியரென்னும் போலி பௌத்தர்களும் என்ன தத்துவத்தை அறிந்துவிடப் போகிறார்கள்? பிறந்து அழிவோரைக் கடவுளாகக் கொண்டவர்களுக்கு, பிறப்பு, இறப்பு இல்லாத உன்னைப் பற்றி என்ன தெரியும்? ஏதுமறியாமல் பிதற்றும் அவர்களையும் ஏதும் செய்யாது மன்னித்து அருளும் உன்னை, அழிவே இல்லாத தோத்திரங்களாலும் மந்திரங்களாலும் வாய்மொழியாகப் பாடிப்பாடிப் பரவி அருளலைக் குறிக்கும் உன் தூக்கிய திருவடியானதும், மானுட உயிர்களனைத்தும் அங்கே வந்து அடைவதே குறிக்கோளாகக் கொள்ள வேண்டியதுமான குஞ்சிதபாதத்தை நெஞ்சிலே இருத்தி வைத்துக்கொண்டாடும் அடியவர்களின், இடர்களை வேரோடு களைந்து அருள்வாய் எம் ஐயனே, எந்தையே, ஈசனே, ஆனந்தக்கூத்தனே, திருநெடுங்களம் வாழும் எம் இறைவனே!

- ஓவியமும் விளக்கமும் : பத்மவாசன் -



(இந்து கலாசார திணைக்கள வெளியீட்டிலிருந்து)

காலைக்கதிர்
Kalaikkathir



# ஐப்பான் நன்கொடை வாகனங்கள் கைநழுவிப் போனமை எங்ஙனம்?

## மூடுமந்திர நிர்வாகம் எதற்காக?

- ந. லோகதயாளன் -


在スリランカ日本国大使館
THE EMBASSY OF JAPAN
IN THE DEMOCRATIC SOCIALIST
REPUBLIC OF SRI LANKA
04TH FLOOR, MJM VERANDA OFFICES,
34, W A D RAMANAYAKE MAWATHA,
COLOMBO 02, SRI LANKA.
TEL : 011 2693831 – 3
FAX : 011 2698629
http ://www.lk.emb-japan.go.jp

July 29th 2022

Mr. V Manivannan
Mayor
Jaffna Municipal Council

Dear Sir,

Approval for project cancellation and request to refund the fund of "The Project for Providing Secondhand Waste Collection Trucks in Jaffna"

This letter is to inform you that we approve the cancellation of the project, "The Project for Providing Secondhand Waste Collection Trucks in Jaffna".

It is greatly regrettable that the project has already been 3 years late over the schedule and you were unable to implement the project. However, in light of your circumstances, which was informed on your letter dated on 5th May 2022, we decided to grant an approval for the cancellation.

We kindly request you to refund the total fund of LKR 14,329,446 back to the Embassy of Japan in line with our instruction as soon as possible.

Yours sincerely,

SUZUKI Katsuhiro(Mr.)
Second Secretary
Economic Cooperation Section
Embassy of Japan

ஐப்பானிய தூதரகத்தால் அனுப்பப்பட்ட கடிதம்

வடக்கின் ஒரேயொரு மாநகர சபையான யாழ்ப்பாணம் மாநகர சபை மீண்டும் போதிய சுத்திகரிப்பு இன்றி காணப்படும் நிலையில் கூட்டமைப்பின் காலத்தில்கிடைத்த 4 'கொம்பக்ட்' வாகனம் வி.மணிவண்ணன் காலத்தில் இரகசிய தீர்மானத்தினால் கை நழுவிப் போகின்றமை ஆவண ரீதியில் கண்டு பிடிக்கப்பட்டுளது.

ஜப்பான் அரசினால் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு வழங்க இணக்கம் தெரிவித்த 4 'கொம்பக்ட்' வாகனங்கள் தற்போது கிடைக்காமல் போகும் நிலை காணப்படுகின்றமை தொடர்பிலான ஆவணங்கள் ரீதியிலான ஓர் பார்வை இங்கே தரப்படுகின்றது.

'மீள்சுழற்சிசெய்யப்பட்டஉபகரணகையகப்படுத்தல் ஒப்பந்த திட்டம்' நான்கு வருடங்களுக்கும் மேலாக தாமதப்படுத்தப்பட்டதையடுத்து, மறுசீரமைக்கப்பட்ட கழிவுகளை சேகரிக்கும் நான்கு பாரவூர்திகளை இறக்குமதி செய்வதற்குரிய அனுமதி பெறப்படாத காரணத்தினால் திட்டத்தில் இருந்து வெளியேறுவதாக ஜப்பானியத் தூதரகம் 2022-07-29 அன்று எழுத்தில் அறிவித்துள்ளது.

### ஆனல்ட்டின் காலம்

முன்னாள் முதல்வர் இ.ஆனல்ட்டின் காலத்தில் கழிவுகளை அகற்றும் நான்கு டிப்பர் வகை (கொம்பக்ட்) வாகனங்களை வழங்குமாறு ஜப்பானியத் தூதரகத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதற்கு இணங்கிய ஜப்பான் தூதரகம் 4 வாகனங்களையும் இறக்குமதி செய்வது தொடர்பாக 2019-03-19 இல் ஓர் ஒப்பந்தமும் மேற்கொண்டு இதற்கான பணி முன்னெடுக்கப்பட்டது. இதன்போது அந்த 4 வாகனங்களையும் இலங்கைக்குள் கொண்டு வரும் போது கணிக்கப்பட்ட பெறுமதிக்காக இலங்கை அரசிற்கு செலுத்த வேண்டிய சுங்கத் தீர்வையாக ஒரு கோடியே 43 லட்சத்து 29 ஆயிரத்து 446 ரூபா அலது 83 ஆயிரத்து 432 அமெரிக்க டொலரைசெலுத்தவேண்டும் எனவும் கண்டறியப்பட்டபோது அந்த தொகையினையும் ஜப்பானியத் தூதரகம் யாழ்ப்பாணம் மாநகரசபைக்குநன்கொடையாக வழங் கியது.

இந்தப் பணத்தை மாநகர சபை 2019-03-28 அன்று தனியான ஓர் கணக்கில் வைப்பிலிடப் பட்டது.

இந்த திட்டம் அனுமதிக்கும் போது இ.ஆனல்ட் முதல்வராக இருந்த காலத்தில் ஈஸ்டர் தொடர் குண்டு வெடிப்பு, கொரோனாத் தாக்கத்தின் மத்தியில் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் சில முன்னெடுப்புக்கள் மேற்கொண்டபோதும் நிர்வாக விடயங்களில், மாநகர சபை கையாண்ட நடவடிக்கைகளில், தவறு இருப்பதாக அனுமதி வழங்க வேண்டிய திணைக்களங்களால் சுட்டிக்காட்டப்பட்டது. இதனால் வாகனத்தை பெற்றுக்கொள்ள முடியவில்லை.

இருந்தபோதும் 2019-06-12 அன்று இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்கு அனுமதி கோரி முன்னாள் முதல்வர் கடிதம் எழுதியுள்ளார். அதேபோன்று 2019-06-18 அன்று அனுமதிச் சான்றிதழிற்கான விண்ணப்பமும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.


இதன்பின்பு 2019-11-14 அன்று ஒரு லட்சத்து 15 ஆயிரம் ரூபா செலுத்தி இறக்குமதிச் சான்றிதழ் பெறப்பட்டுள்ளது. இது 3 மாதம் மட்டுமே வலுவானது. ஆனாலும் அக் காலத்தில் பெறப்படவேண்டிய மற்றுமோர் அனுமதியான சி.யூ.ம் அனுமதி என்னும் நிதி அமைச்சின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் (External Resource Department) அனுமதியை பெறுவதிலேயே மாநகர சபை நெருக்கடியை எதிர் கொண்டது. இதற்காக 2020-06-15 இல் இந்த வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு முன்னாள் முதல்வர் கடிதம் அனுப்பிய அதே நேரம் 2019-11-14 அன்று இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திடம்

பெற்ற அனுமதியை கால நீடிப்புச் செய்து தருமாறும் 2020-11-02இல் மாநகர சபையால் அதே இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.

அதேநேரம் 2020-11-02இல் மாநகர சபையால் இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பிய கடிதம் தொடர்பில் பதில் ஏதும் வரவும் இல்லை

இக் காலப் பகுதியில் ஏற்பட்ட தடைகளை நீக்க முன்னாள் முதல்வர் 2020-06-30 அன்று திறைசேரிக்கு ஓர் கடிதத்தை எழுதியுள்ளார். அதாவது எம்மிடம் உள்ள பணத்தை நீங்கள் பெற்றுக்கொண்டு அந்த வாகனங்களைப்பெற்றுத்தாருங்கள் என்றும் எழுத்தில் கோரிக்கை விடப்பட்டது.

(11ஆம் பக்கம் பார்க்க)


யாழ்ப்பாணம் மாநகர சபை
JAFFNA MUNICIPAL COUNCIL
Point-Pedro Road, Jaffna
021 222 2275
Fax 021 222 2334

May 5th 2022.

Mr. Toru Igarashi
Second Secretary
Development Cooperation Section
Embassy of Japan

Dear Sir,

"The Project for Providing Secondhand Waste Collection Trucks in Jaffna" assisted by Japan's Grant Assistance for Grassroots Human Security Project

Jaffna Municipal Council signed the agreement with the Embassy of Japan on March 19th 2019 for Providing Secondhand Waste Collection Trucks in Jaffna, the project fund USD83,432- (LKR14,329,446-) was transferred from the Embassy of Japan to JMC on March 28th 2019.

After issuing the import license of all secondhand waste collection trucks, we seek approval from External Resources Department to transfer the project fund to the Suppliers, The Society for Promotion of Japanese Diplomacy (SPJD). According to their instruction, we responded to their required documents over one year, however, we were not able to get an approval from them.

In response to this, we had an meeting with the State Ministry of Provincial Councils and Local Government Affairs on February 11th 2021 and they agreed to submit the cabinet paper to expedite the project approval. However, the project did not progress due to the adverse impact of the COVID-19 pandemic and frequent change in person of the above ministry even we have been trying to follow-up with their procedures. As a result, we could not get necessary approval from related institutions until now.

In addition, we are currently unable to receive any assistance from other donors due to this project stagnation. There is no sign to get the cabinet approval, we decide to cancel this project and refund the funds we received back to the Embassy of Japan.

Yours sincerely,

Municipal Commissioner
Jaffna Municipal Council.

Copy:- Hon.Mayor, Jaffna Municipal council

திட்டத்தை ரத்துச் செய்து நிதியை ஐப்பனிய தூதரகத்திடம் திருப்பி அனுப்ப முடிவு செய்துள்ளோம் என ஆணையாளர் எழுதிய கடிதம்

# ஜப்பான் நன்கொடை ..........

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

இக்காலத்தில் திறைசேரி மாநகர சபைக்கு 2020-07-08 இல் நீங்கள் தவறான திணைக்களத்திற்கு கடிதம் எழுதியுள்ளீர்கள் என பதில் அனுப்பி பிரதியை உரிய திணைக்களத்திற்கும் அனுப்பியுள்ளது. அதேபோன்று 2020-12-02 திகதியில் வெளிநாட்டு வளங்கள் திணைக்களமும் பதிலளித்துள்ளது.

### மணிவண்ணன் காலம்

2020 ஆம் ஆண்டு டிசெம்பர் இறுதியில் தற்போதைய முதல்வரான வி.மணிவண்ணன் பதவியேற்ற நிலையில் இதற்கு விசேட அமைச்சரவை அனுமதி பெற்றால் மட்டுமே வாகனத்தை தருவிக்க முடியும் எனவும் கூறப்பட்டதனால் 2021-11-19 அன்று அமைச்சரவை அனுமதிக்காக அமைச்சர் டகளஸ் தேவானாந்தாவிற்கு சபையால் ஓர் கடிதம் எழுதப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டின் ஆரம்ப காலம் வரையில் நிதி அமைச்சின் கீழ் உள்ள சி.யூ.ம் அனுமதி என்னும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் அனுமதியை மாநகர சபையால் பெறப்படவேயில்லை.

இக் காலத்தில் 2022-05-05 அன்று, தற்போதைய முதல்வரான வி.மணிவண்ணனின் காலத்தில், ஆணையாளரால் ஜப்பானியத் தூதரகத்திற்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டது. பல காரணங்களைக் குறிப்பிட்டு, அவற்றின் அடிப்படையில் தீர்மானம் என விளக்கி அக் கடிதம் அனுப்பப்பட்டமையே மாநகர சபைக்கு இப்போது பாதகமாக அமைந்துள்ளது.

இவ்வாறு 2022-05-05 ஆம் திகதிய கடிதத்திற்கு பதிலளித்து 2022-07-29 அன்று ஜப்பானியத் தூதரகம் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு அனுப்பிய கடிதத்தில் மாநகர சபையின் கடிதத்தின்பால் திட்டத்தை இரத்துச் செய்வதாகவும் தம்மால் வழங்கிய பணத்தை மீள ஒப்படைக்குமாறும் கோரியுள்ளது.

நானகு ஆண்டுகளாக மாநகர சபையின் முயற்சிக்குள் இருந்த விடயத்தினை மூடி, பணத்தையும் மீளக் கையளிக்குமாறு ஜப்பான் தூதரகம் கோரியதற்கு 2022-05-05 அன்று யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளருக்கு எழுதிய கடிதமே அடிப்படையாக அமைந்துள்ளது. அந்த கடிதத்தில் இத் திட்டம் ஸ்தம்பிதம் அடைந்துள்ளதால் எம்மால் மேலதிகமாக இதர கொடையாளிகளிடம் உதவிகளை பெற்றுக்கொள்ள முடியவில்லை. அமைச்சரவை ஒப்புதல் கிடைக்கவும் எந்த அறிகுறியும் இல்லை. இதனால் இத் திட்டத்தை இரத்துச் செய்து, பெறப்பட்ட நிதியை ஜப்பானியத் தூதரகத்திடம் திருப்பியளிக்க முடிவு செய்துள்ளோம். எனக் குறிப்பிட்டுள்ளார் ஆணையாளர். இதுவே பாதகமாக அமைந்துள்ளது.

இந்த கடிதம் வழங்கிய பின்பு நான்கு மாதாந்தக் கூட்டங்களும், பணத்தை மீளத் தருமாறு ஜப்பான் தூதரகம் கோரிய பின்பு ஒரு மாதாந்தக் கூட்டமும் யாழ்ப்பாணம் மாநகர சபையில் இடம்பெற்றபோதும், மாநகர சபையில் எந்தவொரு விடயமும் சாதாரண அறிவித்தலாகத்தன்னும் தெரிவிக்கப்படவில்லை என்பதோடு



உறுப்பினர்கள் அனைவருக்கும் இவ்விடயம் மூடிமறைக்கப்பட்டுமுள்ளது.


அதாவது மாநகர முதல்வரும் ஆணையாளரும் மட்டுமே எடுத்த அந்த இரகசிய தீர்மானமே ஜப்பான் தூதரகத்தின் 2022-07-29 ஆம் திகதிய கடிதத்திற்கு அத்திவாரமாக அமைந்துள்ளமை ஆவண ரீதியில் நிரூபணமாகியுள்ளது.

ஜப்பான் தூதரகமே இவ்வாறு கடிதம் எழுதுமாறு தூண்டியதாக சிலர்கூற முற்பட்டால் இது யாழ்ப்பாணம் மாநகர சபையா அல்லது ஜப்பான் மாநகர சபையா என்ற கேள்வியும் எழும்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் கழிவகற்றலிற்காக வருடாந்தம் பத்துக்கும் மேற்பட்ட உழவு இயந்திரங்கள் வாடகைக்கு அமர்த்தி பெரும் தொகை செலவு செய்யும் நிலையில் கையில் கிடைத்த தோண்டியை கூத்தாடிக் கூத்தாடி போட்டுடைத்தான்டி என்ற நிலைவரத்தில் மாநகர சபையின் தற்போதைய நிர்வாகம் செயல்பட்டுள்ளது என்பதுதான் இதில் துரதிர்ஷ்டமான விடயமாகும்.

### ஆளுநரின் தலையீடு

இந்த அமளிகளின் மத்தியில் நேற்றைய தினம் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மாநகர ஆணையாளருக்கு எழுதியுள்ள கடிதத்தில் இந்த நிதியினை ஜப்பான் தூதரகத்திற்கு உடன் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநர் அறிவுறுத்தியுள்ளார் என தெரிவித்துள்ளார்.


Ministry of Public Services, Provincial Councils and Local Government


Re. 04 Compactors to be Imported by the Embassy of Japan to the Jaffna Municipal Council

This is with reference to the Recycled Equipment acquisition project partner agreement above matter.

2) The agreement should be signed by the Mayor before Municipal commissioner and the commissioner too has to Sign. The common seal of the council also should be ... contract on behalf of the council.

3) As the approval of the secretary is required in this regard, kindly request you to ... above defects in the agreement and seal it to the secretary.

S.M. Madawalagama
Director
National Solid Waste Management Support Centre
For Secretary
State Ministry of Provincial Councils and Local Government


Department of Local Government, Northern Province


Department of External Resources

Secretary
Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils & Local Government

Dear Sir

The Project for Upgrading Waste Collection Trucks of Jaffna Municipal Council under GGP (Grant Assistance for Grass-Root Level Human Security Projects) Assistance Embassy of Japan

This has reference to your letter dated 29th October 2020 on the above.

We would like to bring to your kind attention to the following matters highlighted ... letter dated 08th August 2020 on the above.



Department of Treasury Operations

The Project for upgrading Waste Collection Trucks in Jaffna under GGP by Embassy of Japan

Please be aware that the Department of Treasury Operations will take necessary arrangements to inform the banking details to deposit the money once the ERD has given their concurrence on the signed MOU.

R.M.A. Ratnayake
Director General


Copy: 1. Secretary, Ministry of Public Administration, Home Affairs Provincial Council and Local Government - For necessary action pls.
2. Director General, Department of External Resources - For necessary action pls.


JAFFNA MUNICIPAL COUNCIL

Hon. Douglas Devananda
Minister of Fisheries and Aquatic Resources

Sir,

UPGRADING WASTE COLLECTION TRUCKS IN JAFFNA UNDER GGP PROJECT BY THE EMBASSY OF JAPAN.


Copy: Hon. Mayor, Jaffna Municipal Council.

காலைக்கதிர் Kalaikkathir

# ஒருலட்சம் ரூபாவின் பெறுமதி 30 ஆயிரம் ரூபாவாக வீழ்ச்சி!



## ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டு

இலங்கை ரூபாவின் பெறுமதி மிகவும் மோசமான வீழ்ச்சியை பதிவு செய்துள்ளதாக, நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

2021ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதல் 2022 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் வரையிலான ஒரு வருடத்தில் ஒரு லட்சம் ரூபாவின் பெறுமதி 30 ஆயிரம் ரூபாவாகக் குறைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தை அறிவித்தாலும் அதற்கு எதிராக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் அதனை நடைமுறைப்படுத்த இடமளிக்க மாட்டார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வற் வரியை 3 வீதமாக அதிகரிக்கும் ஜனாதிபதியின் யோசனைக்கு நீங்கள் உடன்படவில்லை என்றால் வரவு – செலவுத் திட்ட இடைவெளியைக் குறைப்பதற்கு அரசாங்க வருமானத்தை எவ்வாறு அதிகரிப்பது என எதிர்க்கட்சியினரிடம் சுசில் பிரேமஜயந்த கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளிக்கும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா இவ்வாறு தெரிவித்துள்ளார்

## நாட்டில் தேங்காய்க்கு தட்டுப்பாடு ஏற்படலாம்!

நாட்டில் தேங்காய்க்கு தட்டுப்பாடு ஏற்படலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

இரண்டு மாதங்களில் 20 லட்சம் தேங்காய்கள் பாகிஸ்தானுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

இதனால் எதிர்வரும் நாள்களில் தேங்காய்க்கு தட்டுப்பாடு ஏற்படலாம் என மரபு ரீதியான தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மரபு ரீதியான தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் அழைப்பாளர் புத்திக டி சில்வா கூறுகையில்–

எதிர்வரும் நாள்கள், நாட்டில் தேங்காய் விளைச்சல் குறைவான காலப் பகுதி என்பதால் சந்தைக்கு போதியளவு தேங்காய் நிரம்பல் செய்ய முடியாத நிலை காணப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் தேங்காய்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் சாத்தியங்கள் வெகுவாகக் காணப்படுகின்றன எனத் தெரிவித்துள்ளார்.

## கணவன் இறந்த செய்தியை அறிந்ததும் மனைவி துயரத்தால் சிலமணிக்குள் சாவு!



திருமணமாகி 60 வருடங்கள் ஆன ஒரு தம்பதி ஒரே நாளில் சில மணி நேரங்களிலேயே உயிரிழந்த சம்பவம் ஒன்று கண்டியில் பதிவாகியுள்ளது. குருதெனிய, தம்பாவெல பிரதேசத்தில் இந்த சம்பவம் பதிவாகியுள்ளது.

எண்பத்தெட்டு வயதான ஆர்.ஏ.எஸ்.ரணசிங்க மற்றும் அவரது எண்பத்தொரு வயதான அவரது மனைவி ஏ.ஜி. பண்டாரநாயக்க ஆகியோரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இராணுவத்தில் சேவையாற்றி 60 வருடங்களாக மனைவியுடன் வாழ்ந்து வந்த இவர் செவ்வாய்க்கிழமை காலை உயிரிழந்துள்ளார். கணவரின் மரணச் செய்தி கேட்டு துக்கமடைந்த மனைவியும் சில மணித்தியாலங்களில் உயிரிழந்துள்ளார்.

மூன்று பிள்ளைகளின் அன்பான தந்தை மற்றும் தாயான இந்தத் தம்பதியருக்கு பதினொரு பேரக்குழந்தைகள் உள்ளனர். மூத்த மகனும் இலங்கை பொலிஸ் தலைமைப் பரிசோதகராக உள்ளார்.

இந்த தம்பதியின் இறுதி சடங்குகள் 10 ஆம் திகதி நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# கரப்பான் பூச்சியுடன் கோழி பிரியாணி மட்டக்களப்பு உணவகத்தில் பார்சல்!



மட்டக்களப்பு நகர் பிரதேசத்திலுள்ள பிரபல உணவகம் ஒன்றில் கரப்பான் பூச்சியுடன் கோழிப் புரியாணி பார்சல் வழங்கப்பட்டுள்ள சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

மட்டு. போதனா வைத்தியசாலையில் கடமையாற்றி வரும் வைத்தியர்கள் சம்பவதினமான புதன்கிழமை விருந்து உபசாரம் ஒன்றுக்காகக் கோழிப்புரியாணியை வாங்கியுள்ளனர்.

வாங்கிச் சென்று அதனை உண்ணுவதற்காகத் திறந்தபோது ஒருவரின் பார்சலில் கோழிப் பொரியல் இறைச்சியுடன் கரப்பான் பூச்சியும் பொரித்த நிலையில் இருந்துள்ளது.

இதனையடுத்து மட்டக்களப்பு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிக்கு முறைப்பாடு தெரிவிக்கப்பட்டதை அடுத்து உடனடியாக பொதுச் சுகாதார அதிகாரிகள் உணவகத்தை சோதனையிட்டதுடன் உணவக முதலாளியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் பீற்றர் போல் முன்னிலையில் முற்படுத்தியதையடுத்து அவரை எதிர்வரும் 8 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு உத்தரவிட்டு 25 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதியளித்து விடுவித்துள்ளார்.

மேலும், புதன்கிழமை பொது சுகாதார அதிகாரிகள் நகர் பகுதியில் அமைந்துள்ள உணவகங்களை முற்றுகையிட்டு சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டு பாவனைக்கு உதவாத 25 அரிசி மூடைகளைக் கைப்பற்றியதுடன் சுகாதாரமில்லாத பல உணவகங்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுத்துள்ளனர்.

சுகாதாரமற்ற முறையில் செயற்பட்டுவந்த பல கடைகளுக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஈ.உதயகுமார் தெரிவித்துள்ளார்.

இதன் போது இரண்டு பிரிவுகளாக பொது சுகாதார அதிகாரிகள் உணவங்களை முற்றுகையிட்டுள்ளனர்.

இதன் போது ஓர் உணவகங்களை சோதனையிட்டு அங்கு பணியாற்றுபவர்கள் சுகாதார பரிசோதனை மேற்கொண்டுள்ளனரா மற்றும் உணவங்கள் சிற்றுண்டிகள் உட்பட அனைத்தும் சோதனையிட்டபோது அங்கு ஓர் உணவகத்தில் பாவனைக்கு உதவாத 25 அரிசி மூட்டைகளைக் கைப்பற்றியதுடன் அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை ஏனைய உணவகங்களை முற்றுகையிட்டபோது அங்கு சுகாதாரமற்ற முறையில் பல உணவகங்கள் செயற்பட்டுவந்தமையைக் கண்டுபிடித்து அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்குதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையைத் தொடர்ந்து இடம்பெறும் அதேவேளை சுகாதாரம் பேணப்படாது மனித பாவணைக்கு உதவாத உணவுகளை விற்பனை செய்த உணவகங்களுக்கு எதிராக கடும் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஈ.உதயகுமார் தெரிவித்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.09.2022இல் வெளியிடப்பெற்றது.